SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

வேடிக்கை பார்க்கலாமா?

—படத்துடன்

மாமனும் மருமகனும்

அவன் ஒரு வாத்தியார்

—'ட' எழுதியது.

நாகஸ்வரம் வீருசாமி பிள்ளை

—ஈ. கிருஷ்ணய்யர்.

கோயிலா? கொள்ளையா?

விவசாயம்

—வ. வே. சு. அய்யர்.

"ஆச்சானுக்குப் பிச்சான்"

மூன்று துயரமான சம்பவங்கள்

—மகாத்மா காந்தி.

புஸ்தகம் 4. சித்திரை மீ 22உ (4-5-34) வெள்ளி இதழ் 23.

ஜனங்கள் ரசிக்க

பொதுஜன அபிப்பிராயம் என்பது ஒரு ஆழந் தெரியாத சமுத்திரம். "இந்த ஆழந் தெரியாத சமுத்திரத்தில் காலை விடு" என்று சிலபேர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எது சம்பந்தமாகத் தெரியுமா? எழுத்து சம்பந்தமாகத்தான். "ஜனங்கள் ரசிக்க எழுத வேண்டும், சார்" என்று ஒரு பல்லவி எங்கும் பாடப்படுகிறதல்லவா? அந்தப் பல்லவிக்கு அர்த்தம், அதைப் பாடுபவரில் பெரும்பாலோருக்குத் தெரியாது. ஆனால், எழுதக்கூடிய அநேகரை இந்தப் பல்லவி, வதைதயை வாங்கிவிடுகிறது.

தனக்கு ஏதோ ஒரு விஷயம் தெரிந்துவிட்டதாக எண்ணியே ஒருவன் எழுத ஆரம்பிக்கிறான். அவன் "ஜனங்கள் ரசிக்க" எழுதவேண்டுமாம். எதற்காகவோ? இந்த உபதேசத்தை அலசிப்பார்த்து, காரணத்தைப் பச்சையாகச் சொன்னால், விஷயம் விளங்கும். எழுதும் ஒருவனை "ஜனங்கள் ரசிக்க எழுது, ஐயா" என்றால், "ஷாப்புக்கடை வியாபாரியாக மாறு, ஐயா" என்று சொல்லுவதற்குத்தான் சமம். அதாவது, எழுத்துக்களைத் தம்படிகளாக மாற்றத் தெரியாத ஆசிரியனால் பயனில்லை என்பது இவர்கள் கருத்து என்றால், கோபித்துப் பயனில்லை.

இது வியாபார யுகர்கான். அதில் ஒன்றும் ஆட்சேபனையில்லை. எதை எடுத்தாலும் ரூபாய் அணாப் பைசாக் கணக்குப் போடாமல் யாரும் காரியம் செய்வதில்லை; செய்ய முடியவில்லை. "ஜேபி கனத்தவர் பெரிய மனிதர்" என்ற மனோபாவம் பலத்து வருகிறது. ஜேபியோ, "உலகத்துக்கு நன்மை செய்பவனிடம்தான் கனப்பேன்" என்று நியமம் வைத்துக்கொண்டிருக்கிறதா? அதுதானில்லை. அப்படியானால், "வை, ராஜா, வை", குதிரைப் பந்தயம், வார்த்தைப் போட்டிப் பரிசு இந்தமாதிரி தெகிடுதத்தங்கள் செய்பவர்களை உலகத்தில் காண முடியாது. ஆகையால், ஜேபி கனப்பது, எழுத்தின் பெருமைக்கு நிரூபணமாகிவிடாது.

தமிழ் நாட்டில் இப்பொழுதுதான் ஏதோ இலக்கியத்துக்கு விடிவு காலம் வந்திருக்கிறதோ என்று நினைக்கும்படி, அங்கங்கே ஒன்றிருவர் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். "நமது எழுத்துக்களை ஷாப்புக்கடைத் தராசில் போட்டு நிறுத்துப் பார்த்து, நல்ல விலை போகுமானால்தான் மேலே எழுதலாம்; இல்லாவிட்டால் ஒருவரிடமும் சொல்லாமல் குமாஸ்தா உத்தியோகம் தேட வேண்டியதுதான்" என்ற மனோபாவத்தை யாராவது உண்டாக்கினால், "பழய குருடி, கதவைத் திறடி" தான். "எங்களுக்கு இருக்கிறது இலக்கியம்; அதுதான் பழய கம்பராமாயணம்" என்று குந்திவிட வேண்டியதுதான். கம்பராமாயணம் பெரிய இலக்கியந்தான். ஆனால், காலத்துக்கேற்ற புதிய புதிய நூல்கள் தோன்றினாலன்றி, பாஷை ஜீவன் குன்றி மூச்சுத் திணறவேண்டித்தான் நேரும்; அந்தக் கம்பராமாயணத்துக்குக்கூட நாம் அருகதையற்றவராய்ப் போய்விடுவோம்.

எழுத்துக்குப் பண மதிப்புப் போடலாமா, கூடாதா என்றால், நன்றாய்ப் போடலாம்; போடவேண்டும். ஆனால், ஆசிரியன் பணத்தையே குறிக்கொண்ட வர்த்தகனாக மாறிவிடக் கூடாது. பொதுஜன அபிப்பிராயம், நியாகரா நீர்வீழ்ச்சிக்குச் சமம். அதற்கு அணைகோலி, வழி வகுத்து, நல்ல திசையில் செலுத்தும் எஞ்சினீர்களில் ஒருவனாக விளங்குபவன்தான் நல்ல ஆசிரியன்.

அணைகட்டாத பொதுஜன அபிப்பிராயம் திக்குத்திசை தெரியாது ஓடும்போது, தானும் அதில் பாய்ந்து விடுவதால் பணம் கிடைக்கலாம். வேறு விதமாகவும் கிடைக்கக் கூடாதா? பொது ஜனங்கள் ரசிக்கும்படி எழுதுவதை விட்டு, தான் எழுதுவதைப் பொது ஜனங்கள் ரசிக்கும்படி செய்ய ஏன் ஒருவன் முயலலாகாது? மேல் நாட்டில் எத்தனையோ பேராசிரியர்கள் சமீப காலத்தில் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் பொது ஜனங்களின் ரசத்தை 'மீட்டர்' வைத்துப் பார்த்து, எழுத ஆரம்பிக்கவில்லை. ஜனங்களின் ரஸத்தையே அடித்து அடித்து எழுதி, புதிய திசையில் அவர்களுடைய ரஸிகத் தன்மை திரும்பும்படி செய்தார்கள் அந்த ஆசிரியர்கள். ரஸிகத் தன்மை என்பதுதான் என்ன? குழந்தை ரஸிக்கிறது பால பாடத்திலுள்ள 'அம்மி, ஆடு'களின் படத்தை. பெரியவர்களுக்கோ ஒரு ரவி வர்மாப் படமாவது வேண்டியிருக்கிறது. வளர்ச்சியும் முன்னேற்றமும், ரஸிகத்தன்மையையும் மாற்றிவிடும். வளர்ச்சியும், முன்னேற்றமும் உண்டாக்கும் ஆசிரியர்களே இப்பொழுது தமிழுக்குத் தேவை; எழுத்துக்கு, ரூ. — அ. — பை. சில்லறை மாற்றும் ஒன்றையே நோக்கமாகக் கொண்ட ஆசிரியர்களல்ல.

—தி. ஜ. ர.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] சித்திரை௴ 22௳ வெள்ளிக்கிழமை (4—5—1934) [No. 23

வேடிக்கை பார்க்கலாமா?

சென்ற பத்து தினங்களாகப் பம்பாய் நகரம் அமளி துமளிப் பட்டுக் கொண்டிருக்கிறது. சுமார் எண்பதினாயிரம் ஏழைத் தொழிலாளிகள் பஞ்சாலைகளில் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். பம்பாய்த் தொழிலாளிகள் கட்டுப்பாடு மிகுந்தவர்கள், பிடிவாத நெஞ்சுடையவர்கள். இந்தப் பத்து தினங்களாக அவர்கள் எவ்வளவோ கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அபரிமிதமான உத்ஸாகம் குடிகொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில மூலைகளில் யாரேனும் காலிகள் கலவரம் செய்யாதிருப்பதற்காகப் போலீஸ்காரர் துப்பாக்கி சகிதம் ரோந்து சுற்றி வருகின்றனர். ஒருநாள் கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிலைமையும் சம்பவித்ததாம். பிறகு சர்க்கார், அமைதிகாக்கும் அவசரச் சட்டமொன்றை பம்பாயில் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறது. தொழிலாளரின் தலைவர்களில் அநேகம் பேரைக் கைது செய்திருக்கின்றது. பம்பாயில் ஆரம்பித்த இந்த வேலை நிறுத்த இயக்கம் ஷோலாப்பூர், டெல்லி முதலிய நகரங்களிலுள்ள பஞ்சாலைகளுக்கும் பரவி யிருக்கின்றது.

தொழிலாளிகள் இப்போது வேலை நிறுத்தம் செய்வானேன்? உடலைச் சோம்ப விடுவதில் அவர்களுக்கு லாபமுண்டா? அவர்களுக்குக் கிடைத்து வரும் சம்பள விகிதங்கள் மனித வாழ்க்கைக்குப் போதவில்லையாம். அதை எத்தனையோ தடவை எடுத்துக் காட்டியும் முதலாளிகள் அசட்டையாக இருக்கவே வேறு வழியின்றி சென்ற 23-ம் தேதியினின்று வேலை நிறுத்தத்தை யாரம்பித்து விட்டனர். வியாபார மந்தம் என்று காரணம் கூறப்பட்டு போன வருடத்தில் தொழிலாளிகளின் சம்பளங்கள் குறைக்கப்பட்டன. அநேகர் வேலையினின்று தள்ளப்பட்டனராயினும், வேலையிலிருந்தவர்களிடம் அதிக உழைப்பு வசூலிப்பதென்ற வழக்கம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் மனதில் இது வெகு நாளாகக் 'கரும்குரும்' என்றிருந்தது. அதன் பயனாகக் கடைசியில் வேலை நிறுத்த இயக்கம் தொடங்கிற்று.

தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் பலமான தகராறு. சர்க்கார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதா?

விஷயங்களைத் தீர ஆராய்ந்தால் முதலாளிகளின் போக்கைத்தான் கண்டிக்க வேண்டி யிருக்கிறது. தொழிலாளிகளின் சம்பளங்களைக் குறைத்ததனால் டெல்லி ஆலை முதலாளிகளுக்கு 100-க்கு 45 வீதம் லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறதாம். இந்தக் காலத்தில் இவ்வளவு லாபம் வேண்டுமா? அந்த லாபப் பணத்தைக் குறைத்துக் கொண்டு தொழிலாளிகளின் சம்பளங்களை உயர்த்தினாலென்ன? மேலும் இந்திய ஆலை முதலாளிகளும், லங்காஷயர் ஆலைச் சொந்தக்காரர்களும் சமீபத்தில் ஓர் வகை ஒப்பந்தமும் செய்துகொண்டிருக்கின்றனரென்பது உலகறிந்த விஷயம். இந்த ஒப்பந்தத்தினால் ஆலைகளுக்கு வியாபாரம் ஓங்குமென்றே நினைக்கப்படுகிறது. இந்த சமயத்தில் ஏழைத் தொழிலாளிகளை முத

லாளி மறக்கலாமா? ஆலையின் கதவுகளை ஆறுமாதம் சாத்தியிருந்தாலும் நஷ்டத்தை சகிக்கக்கூடிய திராணி முதலாளிகளுக்கு உண்டு. ஆனால் வேலை நிறுத்தம் செய்துடைய சுமார் ஒரு லட்சம் ஏழைகளும் 'அன்றாடம் காய்ச்சி'கள். அவர்களுடைய குடும்பங்கள் இப்போது என்ன பாடு பட்டுக்கொண்டிருக்கிறதோ? ஆயினும் பட்டினி கிடந்தாவது தங்கள் கட்சியை ஸ்தாபிப்பதென்று தொழிலாளிகள் முனைந்திருக்கின்றனராம்.

முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்பட்டுள்ள இந்தப் பந்தயத்தை சர்க்கார் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாமா? "அவர்களுக்குள்ளேயே சமாதானம் ஏற்படட்டுமே" என்று சில சர்க்கார் அதிகாரிகள் சொல்கின்றார். இது வெறும் மேற்பூச்சான பேச்சு. "முதலாளிகள் இவ்வளவு சம்பளம் கொடுத்தே தீரவேண்டும்; தொழிலாளிகள் இத்தனை நேரம் தான் உழைக்கவேண்டும்" என்று ஒரு அவசரச் சட்டம் கொண்டுவர சர்க்காருக்கு அதிகார மில்லாமற் போய்விடவில்லை. வேணுமென்றால் வேலியிலும் காய்க்கும். சர்க்கார் தட்டிக் கழித்துப் பேசுவதால் நிலைமை வரவர மோசமாகிவிடும் என்பதை எச்சரிக்கை செய்கின்றோம். வளர விட்டு வேடிக்கை பார்ப்பதற்கு இது சமயமல்ல. தொழிலாளிகளை அடக்குவதற்கு அவசரச் சட்டம் பிரயோகிக்கும் சர்க்கார், முதலாளிகளைக் கட்டுப்படுத்த முற்படலாகாதாவென்று கேட்கின்றோம்.

பீர் ஸெரிஸோல்

அவர் ஸ்வீடன் தேசத்தில் பிறந்த ஓர் என்ஜினியர். காந்தியடிகளிடம் அன்பு கொண்டவர். தீனபந்து ஆண்ட்ரூஸுக்கு நண்பர். அந்தப் பெரியார் இந்தியாவில் பீஹார் மாகாணத்தில் பூகம்பத்தினால் வாடும் மக்களுக்கு தமது என்ஜினியர் அறிவை உபயோகப்படுத்துவதற்காக இந்தியாவுக்கு வந்திருக்கிறார். ஐரோப்பிய மகாயுத்தத்தினால் சிதைந்து போன ஐரோப்பிய கிராமங்களைச் செப்பனிட ஓர் தொண்டர் சங்கத்தைச் சிருட்டித்து உழைத்தவர் பீர் ஸெரிஸோல். அவருடைய இந்திய வருகை நல்வரவாகுக!

அப்பாடா கலைந்தது!

டெல்லிச் சட்ட சபையை அடுத்த ஜூலை மாதக் கூட்டத்தோடு கலைத்து விடுவதென்று வில்லிங்டன் துரை நிச்சயம் செய்துவிட்டார். புதிய தேருதல் நடந்தால் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியினர் சட்டசபையைக் கைப்பற்றி விடுவார்களோவெனப் பயந்து சட்டசபையை ஒரு வருடத்துக்கு நீட்டி விடுவதென்று சீமையில் 'வெள்ளை மாளிகை' அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருந்தார்களாம். ஆனால் வில்லிங்டனோ சட்டசபையைக் கலைத்து விடுவதுதான் சரி யென்று சொல்லிக் கொண்டிருந்தாராம். அதிகார வர்க்கத்தில் இப்போது வில்லிங்டன் கூறிய கட்சியே வெற்றி பெற்றிருக்கிறது. சட்ட சபை கலைக்கப்படப் போகிறது. எவ்வளவோ தேசத்ரோகச் சட்டங்களை நிறைவேற்றிய இந்தச் சட்ட சபை கலைக்கப்படும் செய்தி அநேகருக்குச் சந்தோஷமான சமாசாரம்தான்.

இனிமேல் தேசத்தில் நவம்பர் மாதம் முதற்கொண்டு ஆங்காங்கு எலெக்ஷன் கோஷ்டிகள் புறப்படப் போகின்றன. அடுத்த சட்ட சபைக் கூட்டம் செப்டம்பர் மாதத்தில் முடிவு பெறும். நவம்பரில் எலெக்ஷன் கூத்து ஆரம்பித்துவிடும். இந்த நாலு வருஷங்களாகப் பேர், ஊர் தெரியாதிருந்த பேர்வழிகளெல்லாம் இனித் தெருவில் காணப்படுவார்கள். வோட்டு வேட்டைகள் தொடங்கும். கலைக்கப்பட்ட சட்ட சபையில் வீற்றிருந்தவர்களில் அநேகரும் தேருதல்களுக்கு நிற்க ஏற்பாடு செய்வார்கள். ஆனால் பொது ஜனங்களின் உணர்ச்சி யென்ற உறைகல்லில் அவர்கள் தேய்க்கப்பட்டு "வெறும் பித்தளைகள்" என்று நிரூபிக்கப்பட்டு விட்டனர். இதை எவரும் மறக்கமாட்டார்கள்.

தேச மக்கள் இன்னொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். தேருதல்களில் லஞ்சம் தருவது போன்ற கீழ்த்தரமான முறைகளில் எவரும் ஈடுபடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ராஜீயப் பிரதிநிதித்துவத்திற்காக லஞ்சம் தருவதும் லஞ்சம் வாங்குவதும் நமது தேசத்தையே பாழாக்கிவிடுமன்றோ!

ஸ்வராஜ்யக் கட்சி ஜனனம்

ஸ்வராஜ்யக் கட்சியினரின் பெரிய கூட்டமொன்று மகாத்மாவின் கவனிப்பில் ராஞ்சியில் சென்ற 2-ம் தேதி முதல் நடந்து வருகிறது. சட்ட சபைகளில் நம்பிக்கையுடைய அநேக தலைவர்கள் அங்கு கூடிக் கட்சியின் அமைப்பைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

"ஸ்வராஜ்யக் கட்சியில் காங்கிரஸ்காரர்கள் மட்டுமே சேர்க்கப்படுவார்கள்" என்று முடிவு செய்திருக்கிறார்களென்று தோன்றுகிறது. அதுதான் நியாயம். காங்கிரஸ்காரர்கள் சட்டமறுப்பை நிறுத்தி விட்டனரென்ற செய்தி கேட்டதும் அநேக மிதவாதக் கோழைகள் நான் முந்தி நீ முந்தி யெனப் போட்டி போட்டுக் கொண்டு ஸ்வராஜ்யக் கட்சியில் சேர்ந்து சட்டசபைக்குள் செல்வதற்கு சூழ்ச்சி செய்து கொண்டிருக்கின்றனர். அந்தச் சூழ்ச்சிக்கு இடந் தரவே கூடாது. "இந்தியாவுக்குப் பூரண சுயேச்சையே வேண்டும்" என்ற கொள்கையில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு இடந் தரலாமா?

காங்கிரசின் ஆணைகளுக்குட்பட்டு சென்றவருடத்தில் தியாகங்களில் இறங்கியவர்கள்தான் ஸ்வராஜ்யக் கட்சியில் இருக்கவேண்டும். அப்போதுதான் ஸ்வராஜ்யக் கட்சிக்கும் மதிப்புண்டு. 'காங்கிரஸ்' என்ற பெயரை சுயநலத்துக்காகச் சிலர் உபயோகித்துக் கொள்ள இம்மியும் இடந் தரலாகாதென்பது சரியான யோசனையே.

இந்த ராஞ்சிக் கூட்டத்தின் முடிவுகளைக் காங்கிரஸ் மகாசபையின் முடிவு என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. ராஞ்சியில் ஸ்வராஜ்யக் கட்சியினர் செய்துள்ள முடிவுகள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் ஏற்றுக்கொண்டு விடுமாயின் அப்போதுதான் பயனுண்டு.

அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டம் நடந்த பின்னர், 'ஸ்பெஷல் காங்கிரஸ்' கூட்டமொன்றை நடத்துவதற்குத் தலைவர்கள் முற்படுவார்களென நம்புகின்றோம்.

கதரை அணியுங்கள்

நமது உலைக்கூடம்

வெள்ளை—கறுப்பு !

சீமையில் ப்ளூம்ஸ்பரி ஹோட்டலில் இந்திய மாணவர்களும் 21 பேர் வசித்து வந்தனர். திடீரென்று அந்த ஹோட்டல்கார வெள்ளைக்காரருக்கு நிறத்திமிர் ஏற்பட்டுவிட்டது. இந்தியர்களை வெளியே போய்விடுமாறு சொல்லிவிட்டார். இந்த மாதிரி நமது சகோதரர்கள் இதே ஏகாதிபத்தியத்தில் பலவிடங்களில் நிறத் திமிருக்கு ஆளாகி அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் "இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் வித்தியாசமில்லை சமத்வம் பாராட்டுகிறோம்" என்று வாய் கிழியப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்;. எல்லாம் பொய்! இந்தியன் கறுப்பு ஜாதியைச் சேர்ந்தவனென்றும், அவன் வெள்ளை வர்ணத்துக்கு அடிமையாய்க் கிடக்க வேண்டியவனென்றும் பெரும்பாலான வெள்ளைக்காரர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதுதான் உண்மை. கருப்பர் நாடாகிய இந்தியாவிலிருந்து கிடைக்கும் காசு மட்டும் வெள்ளைக்காரர்களுக்குப் பிடிக்கிறது. ஆனால் கருப்பைக் கண்டால் மட்டும் பிடிக்கவில்லை. இது ஏன்? இந்த பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குக் கொஞ்சமாவது சமத்வ அறிவிருந்தால் அந்த ப்ளூம்ஸ்பரி ஹோட்டல் முதலாளியைக் கைது செய்திருக்குமன்றோ! இந்தியா மட்டும் சுதந்திர நாடாயிருந்தால் இப்படி ஒரு கண்காணாச் சீமையில் நமது சகோதரர்கள் கஷ்டப்படுவதை விட்டு வைத்திருப்போமா?

மழை விட்டும் துவானம் விடவில்லை

'கண்ணைப் பிடுங்கிக் காட்டினாலும் கண்கட்டு வித்தை' என்னும் பிரஹஸ்பதிகள் சிலருண்டு. காந்தியடிகளோ சட்டமறுப்பை நிறுத்திவிட்டார். காங்கிரஸூம் இன்னும் சில தினங்களில் அவருடைய முடிவை ஒப்புக்கொண்டுவிடும். 'இது வரையில் நாங்கள் எப்போதும் காங்கிரஸோடு ஒத்துழைக்கத் தயார். ஆனால் எங்களுக்கு விரோதமான சட்ட மறுப்புக் கிளர்ச்சியில் காங்கிரஸ் ஈடுபட்டிருக்கும்வரை அதனுடன் சமாதானம் செய்துகொள்ள எவ்வாறு சாத்யப்படும்' என்று சாந்த மூர்த்திகள்போல் பேசிவந்த ஹோர் இப்போது என்ன சொல்கிறார் தெரியுமா? சட்டமறுப்புக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்பதற்காகச் சென்ற இந்தியா லீக் தூது கோஷ்டிக்கு பேட்டியளிக்க மறுத்துவிட்டார். தூது கோஷ்டியால் யாதொரு பயனும் உண்டாகாது என்றும், அதைப்பற்றிய விண்ணப்பமே போதுமானது என்றும் ஹோர் கூறுவதன் அர்த்தமென்ன? நேரில் பேச முடியாத நிலையில்தானே காகிதம் பேச வேண்டியிருக்கிறது. சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டவுடன் சர்க்கார் செய்திருக்கவேண்டிய முதற் கடமை, அரசியல் கைதிகளை விடுதலை செய்திருக்க வேண்டியது. அக்கடமையை எடுத்துக் காட்டச் சென்றவர்களையும் ஹோர் நேரில் பார்க்க மறுப்பது எதனால்? அவர்களென்ன பேயா, பூதமா? 'மழை விட்டும் துவானம் விடவில்லை' என்பதுபோல். சட்ட மறுப்பை நிறுத்தியும் நேர்மையான சமாதானத்திற்கு சர்க்கார் தயாராயில்லை என்று தெரிகிறது.

தமிழுக்கு வந்த மதிப்பு

சென்ற மாதம் 24-ந்தேதி கார்ப்பரேஷன் கூட்டத்தில் முதல் தடவையாக ஒரு அபூர்வ சம்பவம் நடைபெற்றது. திரு. செல்வபதிச் செட்டியார் என்னும் அங்கத்தினர் தமிழில் பிரசங்கம் செய்தார். தலைவர் திரு. லேடன் ஆங்கிலேயராகையால் தமக்கும் விளங்கும்படி திரு. செட்டியார் ஆங்கிலத்திலேயே பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். திரு. செட்டியார் தமது தாய்ப்பாஷையில்தான் பேச முடியுமென்றும், அதைத் தடுப்பதற்கு யாதொரு சட்டமோ, அதிகாரமோ யாருக்கும் கிடையாதென்றும் தைர்யமாகத் தமது பிறப்புரிமையை நிலைநாட்டினர். 'வக்கீல்கள் கோர்ட்டுகளில் தமிழில் தான் பேசவேண்டும். ஆங்கிலத்தில் தான் பேசியாகவேண்டும் என்று நிர்ப்பந்தம் கிடையாது. வக்கீல்கள் கட்சிக்காரர்களை ஏமாற்ற நினைத்தால் மட்டுமே ஆங்கிலத்தில் பேசுவதற்கு அர்த்தமிருக்கிறது' என்று மயூரம் டிஸ்ட்ரிக்ட் முன்சீப், காலஞ்சென்ற ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை கூறியது இச்சந்தர்ப்பத்தில் ஞாபகம் வருகிறது. நம்முடைய நாட்டுப் பாஷையும் தமிழ்; வீட்டுப் பாஷையும் தமிழ். அப்படியிருக்க நம்மில் முக்காலே மூன்றுவீசம் பேருக்குமேல் அர்த்தம் செய்ய முடியாத அந்நிய பாஷையில் பேசவேண்டும் என்பதென்ன தலைவிதியா? ஒன்று, திரு. லேடன் தமிழ் தெரிந்துகொள்ள வேண்டும்; அல்லது ஆங்கிலம், தமிழ் இரண்டும் தெரிந்த ஒருவரை 'துபாஷாக' வைத்துக்கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு ஆங்கிலம் தெரிந்தவர்கள் தாம் அங்கத்தினராகலாம் என்றோ; அப்படித்தான் ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் அப்பாஷையில்தான் பேச வேண்டுமென்றோ கூறுவது சரியாகுமா? மூளைத்து மூன்றுநாள் ஆவதற்குள்ளாகவே ஆங்கிலத்தில் முழுகி எழும் வாலிபர்கள் நிறைந்த தமிழ்நாட்டில், இம்மாதிரி தைர்யமாகத் தமிழரின் மானத்தைக் காத்த திரு. செட்டியாரை நாம் பாராட்டுகின்றோம்.

மாமாவும் மருமகனும்!

வின்ஸ்டன் சர்ச்சில் துரைக்கு எஸ்மாண்ட் ரோமில்லி என்று ஒரு மருமகனுண்டு. அவன் இப்போது மாமனின் கன்ஸெர்வேடிவ் கட்சியை எதிர்த்துக் கொடி யுயர்த்தி யிருக்கின்றான். பையனுக்கு வயது இன்னும் இருபதுகூட ஆகவில்லை. அவன் யுத்தப்பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் படித்தவன். உலகத்தைக் கெடுத்து யுத்தவெறி ஊட்டுபவர்கள் கன்ஸெர்வேடிவ்களென அவன் பள்ளிக்கூடத்தில் பிரசாரம் செய்ததற்காக வெளியே யனுப்பப்பட்டான். உலக சமாதானத்தை நோக்கமாகக்கொண்ட ஓர் பத்திரிகையை ஆரம்பிக்கப் போவதாகவும் மருமகன் சொல்லி யிருக்கின்றான். இந்தப் பத்திரிகை வெளிவராதென்று இதர பத்திரிகைகளெல்லாம் புரளி செய்தும் பையன் பின் வாங்கவில்லை. இந்த இளங்காளையின் பேச்சு வலுத்ததானல் சர்ச்சில் மாமா என்ன செய்யப் போகிறாரோ?

'ஆக்ஸ்போர்ட்' அம்பக் !

சென்ற 26ம் தேதியன்று பத்திரிகைகளில் ஒரு செய்தி தோன்றிற்று. "அமல் கோஸ்வாமி என்ற ஆக்ஸ்போர்ட் பட்டதாரி தமக்கு தோட்டி உத்தியோகம் கிடைக்காத காரணத்தால் கராச்சியில் பட்டினி கிடக்கிறார்" என்பது அந்தச் செய்தி. அந்தச் செய்தியை யனுப்புவித்த அஸோஸியேட் பிரஸ் நிருபரும், பிரசுரித்த பத்திரிகைகளுக்கும் ஒரு வார்த்தை ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

சென்ற வருடம் ஜுலை மாதத்தில் இந்த அமல் கோஸ்வாமியின் வண்டவாளத்தைப் பற்றி ஒரு உண்மை ஹரிஜன் பத்திரிகையில் வெளியாகி யிருந்தது. அது அஸோஸியேடட் பிரஸ் நிருபருக்கும் இதர பத்திரிகாசிரியர்களுக்கும் மறந்துபோய் விட்டது போலும்.

சென்ற வருடம் ஜுலை 1-ம் தேதி ஹரிஜன் பத்திரிகையில் இந்த அமல் கோஸ்வாமியின் கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"நான் ஆக்ஸ்போர்டு பட்டதாரி என்று பொய் சொல்லி இதுவரை ஜனங்களை ஏமாற்றி வந்தேன். இனி இத்தகைய பொய்களைச் சொல்லி நான் வாழ மாட்டேன்" என அமல் கோஸ்வாமியே எழுதி யிருக்கின்றார்.

விஷயம் இவ்வாறிருக்க இன்னமும் இந்த ஆளை ஆக்ஸ்போர்டு பட்டதாரி என வர்ணித்துத் தந்தி அடிப்பதும், செய்தி அனுப்புவதும் சரியாயெனக் கேட்கின்றோம். ஆக்ஸ்போர்டு பட்டதாரி என்றால் அதை உயர்வென எண்ணிக்கொள்ளும் மனப்பான்மை இந்த தேசத்தினின்று ஒழிய வேண்டும்.

செல்லுவதற்கு செட்டியார்

சர்க்கரைக்கு அதிகவரி போடுவது பற்றி ஓர் மசோதா டெல்லி முத்தண்ணு சபையில் சதிருக்கு வந்தது. 'சர்க்கரைக்கு அதிக வரி விதிக்கும் இம்மசோதாவை நிறைவேற்றுவதினால் யாதொரு பாதகமுமில்லை" என்று கோபதி நாராயணசாமி செட்டியார் என்ற தென்னாட்டுப் பேர்வழி அங்கு பேசினார். மசோதா செல்லுமா, செல்லாதா என்பதற்குச் செட்டியாரே சாட்சி. மசோதா நிறைவேறிவிட்டது. ஆனால் ஒரு சந்தேகம். மேற்படி செட்டியாருக்கு சர்க்கரைப் பண்டங்களே பிடிக்காதென்று அவரை யறிந்த நண்பர் ஒருவர் சொல்கின்றாரே அது வாஸ்தவமா? சர்க்கரை வரி அதிகமாகி, விலை அதிகமாகி எக்கேடு கெட்டால் செட்டியாருக்கென்ன? குலாப்ஜான் தின்பவனுக்கன்றோ நஷ்டம்!

கோயிலா? கொள்ளையா?

தமிழர்கள் தயவு செய்து ஒரு சிறிய செய்தியைக் கவனிப்பார்களாக! வடக்கே அமிர்தசரஸில் சீக்கியர்களின் பொன் கோயில் இருக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னே அந்தக் கோயிலுக்குள் சென்றால், அங்கு சாமித் தரகர்கள் தோன்றி "ஐந்தைக் கொண்டா, பத்தைக் கொண்டா" என்று யாத்ரீகர்களைப் பிய்த்துப் பிடுங்கித் தின்று வந்தார்கள். சீக்கிய ஜாதியில் திடீரென்று ஓர் விழிப்புத் தோன்றிற்று. இந்தத் தரகர்களைக்கோயில்களினின்று விரட்டி விட்டார்கள். இப்போது அமிருதசரஸ் கோயிலில் இந்தக் 'கொள்ளை' கிடையவே கிடையாது. தென்னாட்டுக் கோயில்களில் அப்பப்பா—எத்தனை நடுத் தேவதைகள் தெரியுமா?—யாத்ரீகர்களைச் சுற்றி அழைத்துக் கொண்டு போய்க் காட்டுவதற்குக்கூட ஏராளமான கூலி கேட்கிறார்கள். பிறகு கற்பூர மேற்றக் காசு! அர்ச்சனைக்குக் காசு! தரிசனத்துக்குக் காசு! பிரசாதத்துக்குக் காசு! அடடா! எல்லாம் காசு மயம்! ஸ்வாமி தான் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்! சீக்கியர்கள் தங்கள் கோயிலைச் சீர்திருத்தம் செய்தது போல நாம் எப்போது செய்யப் போகின்றோம்?

ஸவுரன் லைசென்ஸ்

இதற்குத்தான் லைசென்ஸ் கேட்பது, இதற்குக் கேட்கப் படாதென்று யாரால் நிச்சயிக்கமுடியும். பரோடாவில் பிராமணர்கள் லைசென்ஸ் வாங்கிக்கொண்டு வைதிகத் தொழில் நடத்த வேண்டுமென்றால் நமது தமிழ் நாட்டில் திண்டுக்கல்லில் க்ஷவர ஸவுரன்கள் லைசென்ஸ் வாங்கிக்கொண்டு நடத்தப்பட வேண்டுமென்று முனிஸிபாலிட்டி சொல்கிறது. இனிமேல் மனிதன் மூச்சிழுக்க லைசென்ஸ், மூச்சுவிட லைசென்ஸ், இப்படியெல்லாம் போட்டாலும் போடுவார்கள். உலகில் எல்லாம் ஒரு கட்டுப் பாட்டுக்குள்ளடங்கி இருக்கவேண்டாமா?

மிஸ்டர் மோடியின் பாடு

பம்பாய் ஆலை முதலாளிகள் சங்கத்துக்குத் தலைவரா யிருந்தவர் எச். பி. மோடி யென்ற மகான். இந்த மகான்தான் இந்தியா-லங்காஷயர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கருணையாளர். சீமைத் துணி இறக்குமதிக்கு இந்திய முதலாளிகளின் ஆதரவும் கிடைக்குமாறு அதன் மூலம் செய்து விட்டார். ஆலை முதலாளிகள் சங்கத்தின் தலைவரான மிஸ்டர் மோடி தமது காரியம் ஆகிவிட்டதென்று அந்தப் பதவியை ராஜீனமா செய்து விட்டுக் கொழுத்தச் சம்பளத்தில் டாடா கம்பெனிக்கு உத்யோகமாகப் போவதாக இருந்தார். அடாடா! பாவம்! திடீரென்று பம்பாயில் ஆலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். முதலாளிகள் கைகளைப் பிசைந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் மோடி உத்தியோகத்தை விட்டுவிட்டுப் போகலாமா? மோடி முழிக்கிறாராம்.

ஸபாஷ் பைரம்மா !

சுபத்திரை ரத சாரத்தியம் செய்த தேசம் இது. கைகேயியும், சத்தியபாமையும் தத்தம் கணவன்மார்களுக்கு போர்க்களத்தில் உதவி செய்ததாகக் கதைகள் உண்டு. சரித்திர காலத்திலும் ஜான்ஸி லட்சுமி போன்று எவ்வளவோ பெண்மணிகளில் வீரமும் சௌர்யமும் காட்டினார்கள். ஆனால் வரவர இந்தத் தேசத்தில் பெண்மணிகள் அடிமைகளாக்கப்பட்டு அடுப்பூதிகளாய்ப் போய்விட்டனர். தேக பலத்தில் குறைந்து போய்விட்டனர். இந்த நிலையில் பங்களூரினின்று கிடைத்துள்ள செய்தி கேட்டு அக மகிழ்கின்றோம். சென்ற வாரத்தில் அங்கு ஓர் திருவிழா நடந்தது. அநேக பெரியோர் பைரம்மா வென்ற பத்து வயதுச் சிறுமிக்கு பல பரிசுகளை வழங்கினார்கள். அந்தச் சிறுமி சில தினங்களுக்கு முன் கெம்பாம்பூடி குளத்தில் 12 மணி நேரம் தொடர்ச்சியாக நீந்தித் தனது சௌர்யத்தைக் காட்டினாள். சிறு வயதில் இவ்வளவு நீந்தல் திறமைக் காட்டிய பெண்மணியை அனைவரும் புகழ்கின்றனர். தமிழ் நாட்டுச், சிறுமிகளும் இத்தகைய திறமைகளைக் காட்டவேண்டு மென்று கேட்டுக்கொள்கின்றோம்.

"வஞ்சம்"

(அசுவதி எழுதிய சிறு கதை)

வெள்ளி மறைந்தது. வானம் வெளுத்தது. பொழுது புலர்ந்தது. கீழ்த்திசையின் அடிவானத்தே உதய சூரியன் திக்விஜயத்திற்குக் கிளம்பினான். பனித்துளிகள் புறமுதுகிட்டோடின. இருளவன் ஓடியொளித்த இடமே தெரியவில்லை. தோளில் ஒரு மண்வெட்டி. அரையில் மின்னும் வெட்டரிவாள். கையில் தடிக்கம்பு. தலையில் பெரிய முண்டாசு. இடுப்பில் இறுகக் கச்சம். இவ்வளவு வைபவங்களுடனும் கந்தன் தனது கூரைக் குச்சினின்று கிளம்பி வயலை நோக்கி நடந்தான்.

அறுவடைக் காலம் நீர்த்தட்டு, வெள்ளப் பெருக்கு, பயிர் நோய் முதலிய கண்டங்களுக் கெல்லாம் தப்பிப் பிழைத்தன பயிர்கள். ஆடிக் காற்றில் அலைத்தெடுக்கப்பட்ட இளம் பசும் பயிர்கள் மூப்புமேலிட்டு, காற்று வேகமும், கதிர் பாரமும் தாங்கமாட்டாது, தலை சாய்த்துத் தரையிற் படுத்துக் கிடந்தன. ஆச்சு, இரண்டு தினங்களில் அநேகமாக அறுவடையாகிவிடும்.

வாய்க்காலில் ஒரு காலும் வரப்பில் ஒரு காலுமாக வயலில் வந்து நின்றான் கந்தன். என்றும் போல் அவன் பார்வை முதன் முதலில் நெற்கதிர்கள் மீது சென்றது. அவன் கண்கள் வயல் முழுவதையும் நோக்கி ஒரு பார்வை பார்த்ததும், அவன் அடிவயற்றில் பகீர் என்றது. ஹிருதயம் அதிக விசையுடன் அடிக்கவாரம்பித்தது. காரணம் இன்றோ நாளையோ அறுவடையாகவிருந்த கதிர்களில் பெரும்பான்மை தலை சீவப்பட்டிருந்ததுதான். யாரோ சோரர்கள் இரவோடிரவாய்க் கதிர்களை அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அநியாயம்! வயிற்றெரிச்சல்! நேற்றைய தினம் பொழுதூர வீடுதிரும்பும் பொழுதுதான் பார்த்துவிட்டுப் போயிருக்கிறான். விடியற்காலையில் கதிர்களைக் காணோமென்றால்!

ஒவ்வோர் இரவும் கந்தன் வயலில் படுத்துக் காவலிருப்பது வழக்கம். அன்று சிறிது சோம்பல் மேலிட்டு அசிரத்தையாக வீட்டில் படுத்துறங்கிவிட்டான். அதன் பலன் இது!

கதிரற்றுக் கிடந்த வெறும் வைக்கோற்புல்லைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவன் மனம் கொதித்தது. வயிற்றெரிச்சல் பொங்கிக்கொண்டு கிளம்பியது. "ஐயோ! காலமெல்லாம் காத்துக் கிடந்து விட்டுக் கடைசியில் கதிர்முழுவதையும் அறுத்துக்கொண்டு போய்விட்டார்களே சண்டாளர்கள்" என்ற சொற்கள் அவன் வாயினின்று கிளம்பின. அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். வயலைவிட்டு நகருவதற்கும் அவன் கால்கள் எழவில்லை.

சரேலென்று அவன் முகம் மாறியது. கோபத்தால் கண்கள் சிவந்தன. "ஹூம்! கசக்கியவன் மட்டும் தெரிந்தால், அவனை..........." என்று தனக்குள் சபதம் கூறும்பொழுது, அவன் கரத்திலிருந்த அரிவாள் உயர்ந்து புரண்டு கொடுத்தது. சூரிய னொளியில் பளீரென்று மின்னியது. அத்துடன் 'கசக்கியது யாராகக்கூடும்' என ஆராயத் தொடங்கியது அவன் மனது.

சிறிது நேரம் சென்றது.

மறுபடியும் அவன் முகத்தில் ஒரு மாறுதல், ஆனால் முன்போல் ரௌத்திராகாரத் தோற்றமல்ல. தயக்கமும், பயமும், கவலையும், ஒருங்கே கலந்த தோற்றம். 'ஆண்டையிடம் இதை எவ்வாறு தெரிவிப்பது,' என்ற மனக் கலக்கமே அந்த முகமாறுதலுக்குக் காரணம்.

அவனுக்கு ஒன்றும் பிடிபடவில்லை.

'எதற்கும் வயலைச் சுற்றிப் பார்த்து வருவோம்' என்றெண்ணி புறப்பட்டான். சுற்றி வந்துகொண்டிருக்கும் போது பாதி வயலிலும், பாதி வரப்பிலுமாகக் கிடந்த ஒரு வெட்டரிவாள் அவன் கண்களில் தென்பட்டது. அதிசயத்துடன், கீழே குனிந்து அதைக் கையில் எடுத்தான். என்ன கனம்! என்ன கூர்மை!

கதிர் திருடவந்தவன் மறந்தோ, இருட்டில் வைத்த இடம் தெரியாமலோ அல்லது பதற்றத்திலோ அதை வைத்துவிட்டுப் போய்விட்டான்!

கந்தன் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அதுபோன்ற வெட்டரிவாள் ஒன்றை முன்பு அடிக்கடி பார்த்திருப்பதாக அவன் ஞாபக சக்தி கூறிற்று. ஆனால் யாரிடத்தில் என்பதுமட்டும் குறிப்பாக ஞாபகத்திற்கு வாவில்லை. ஆண்டையிடம் சொன்னால் என்ன தண்டனைக் கிடைக்குமோ என்ற திகிலுடன் விவரம் முழுவதையும் தெரிவிப்பதற்கு ஆண்டையின் வீட்டை நோக்கி விரைந்தான்.

* * *

வீட்டின் வாசற் திண்ணையில் ஆண்டை உட்கார்ந்துகொண்டிருந்தார். கையில் ஒரு பஞ்சாங்கத்துடன் அறுப்பதற்கு நல்ல வேளை பார்த்துக்கொண்டிருந்தார். புழக்கடையில் கந்தன் வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டதும், எழுந்து சென்றார்.

'எங்கேடா வந்தாய் இந்நேரத்திலே வயலுக்குப் போகாமல், என்றார் ஆண்டை.

கந்தன் சவிஸ்தாரமாக யெல்லாவற்றையும் கூறினான்.

"ஆண்டைக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. அடே! சண்டாளப் பயலே! குடியைக் கெடுத்துவிட்டாயே. அதற்குத்தானேடா உன்னைக் காவலுக்குப் போகச் சொல்லி முட்டிக்கொண்டேன். நெல் முழுதும் போயிருச்சேடா. நேற்று காவலுக்குப் போனாயாடா" என்று அடிவயிற்றிலிருந்து கர்ஜித்தார் ஆண்டை.

ஆண்டையின் தொனியே அவனது பாதிப் பிராணனைப் போக்கிவிட்டது. செய்த குற்றமும் வேறு. நாக்குழற, நடுங்கிய குரலில் இல்....லீ....ங்....க, என்று இழுத்துச் சொன்னான் கந்தன்.

ஆண்டைக்கு கோபம் அதிகரித்தது. 'அடே! கழுதைப் பயலே, அறுவடை காலத்தில், காலம் கெட்டுக்கிடக்கும் ரீதியில் காவலுக்கும் போகாமல் வீட்டில் படுப்பதற்கு என்ன துணிவடா உனக்கு? என்ன திண்ணக்கம்!

தெம்பு! அட பாவிப்பயலே, சண்டாளா'...............என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போனார். நாக்கில் நரம்பின்றி அவர் பேசிய பேச்சையும், வைதவசவுகளையும், அம்மம்ம! எழுதவும் கை நடுங்குகிறது.

கந்தன் கைகட்டி வாய்புதைத்து நின்று அவரது வசவுகளை ஏற்றுக் கொண்டிருந்தான். ஒவ்வொரு வசவும் விஷம் தீட்டிய அம்புபோல அவன் உள்ளத்தில் சுருக்கென தைத்தது. என்ன செய்வான் பாவம்! காவலுக்குப் போயிருந்தால் இதெல்லாம் நேர்ந்திராதல்லவா?

தலைக்குமேல் கூப்பிய கைகளுடன் கந்தன், "சாமி, தெரியாமே செஞ்சுட்டேன். காவலுக்குப் போகாமே யிருந்தது பெரிய தப்புதான். இந்தத் தடவை மட்டும் மன்னிச்சிடுங்க. ஏழை பிள்ளை குட்டிக்காரன். நீங்கள்தான் காப்பாத்தணும். பிள்ளை குட்டிகளெல்லாம் ஒங்கபேரைச் சொல்லிக்கிட்டுத்தான் சாப்பிடுதுங்க. சாமி!" என்று கூறிக் கொண்டே நெடுஞ்சாங்கடையாக தரையில் விழுந்துவிட்டான்.

ஓகோ! காவலுக்கும் போகாமல் வீட்டில் படுத்துறங்கிவிட்டு, கதிர்களையும் திருட்டுப்போக விட்டுவிட்டு இப்படிக் கேட்பதற்கு வெட்கமாயில்லையா உனக்கு? குறப்பயலே! உன்னைக் காப்பாற்ற வேறு வேண்டுமா, நீ செய்த வேலைக்கு. ஏழையாம் ஏழை. பிழைக்க வழியில்லாவிட்டால் கையிலிருக்கிற அரிவாளால் கழுத்தை அறுத்துக்கிறதுதானே. அதற்கு நானா பிணைப்பட்டேன். இவ்வளவு நாள் உனக்கு அழுதது அவ்வளவும் தண்டமா? போதுமடா நீ பண்ணை பார்த்தது. போதும் போதும். இன்றோடு நின்றுகொள். என் முன் நிற்காதே. வயறு பற்றி யெரிகிறது," என்று சீறி விழுந்துவிட்டு, கதவை யடைத்துக் கொண்டு உள்ளே போய்விட்டார்.

சாமி! சாமி! என்று கூப்பிட்டான் கந்தன். அரிவாள் விஷயத்தை ஆண்டையிடம் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு. ஆண்டையின் காதுகளில் இவ்வார்த்தைகள் விழவில்லை.

இரண்டு மணிநேரம் கந்தன் புழக்கடையிலேயே காத்துக் கிடந்தான். ஆண்டை திரும்புவதாகக் காணோம். மனவருத்தத்துடன் வீடு திரும்பினான். கண்களில் நீர் ததும்பி நின்றது. பிழைப்புக்கு வழி போய்விட்டதல்லவா? என்ன செய்வதினி? குடிசையில் குடும்பம் இனி பட்டினிதான் கிடக்கவேணுமா?

* * *

இரண்டு நாட்கள் சென்றன. ஆண்டை வீட்டுப் பக்கமே திரும்பவில்லை கந்தன். அரிவாள் யாருடையது, பயிரைக் கசக்கியது யாரென துப்பு ஆராய்வதிலேயே கவனம் முழுவதையும் செலுத்தி யிருந்தான்.

எவ்வளவு உஷாராக விருந்த போதிலும், போட்டியும், பொறாமையும், பகைமையும், அசூயையும் குடிகொண்டிருக்கும் கிராமங்களில் நிகழ்ந்த ஒரு சம்பவம் வெளிவராமற் போகாது. எனவே விஷயம் சிறிது சிறிதாக வெளிவந்தது. கந்தன் மனதில் பற்பல சந்தேகங்களும், ஹேஷ்யங்களும் கிளம்பின. ஆனால் ஒரு முடிவிற்கும் வரவில்லை.

மாலை வேளை. உலைக்கூடம் ஒன்றில் கந்தன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் முன், உலையில் அறை குறையாகச் செய்யப்பட்டு, காய்ந்து கொண்டிருந்த அரிவாள் கவனத்தை யிழுத்தது.

'யாருக்கு அண்ணே அரிவாள்,' என்று வினவினான் கந்தன் கொல்லனிடம்.

'அந்தக் கிருட்ணன் பயலுக்கு,' என்றான் கொன்றான்.

கிருட்ணன் என்றதும், கண்ணனுக்கு தூக்கி வாரிப் போட்டது. காரணமில்லாமலில்லை. ஏற்கனவே கசமுசல் கிளம்பி யிருந்ததும் அவனைப் பற்றியே கந்தன் சந்தேகங் கொண்டிருந்ததும் அவன் மீதே.

"அவன் தான் அழுத்தமான அரிதாள் வச்சிருந்தானே. எதுக்குப் புதுசு," என்று பேச்சை வளர்த்தான் கந்தன்.

"அது தொலஞ்சு போயிச்சாம். ஆத்துலே எங்கேயோ போட்டுட்டானாம்," என்றான் கொல்லன்.

கந்தன் உடல் சிலிர்த்தது. பின்னும் விவரம் அறிவதற்கு, 'எப்போ தொலஞ்சு போச்சாம்,' என்று வினவினான்.

இப்போத் தாங்கிறேன், ரெண்டு நாளைக்கு முன்னே,' என்றான் கொல்லன்.

கந்தன் சந்தேகம் ஊர்ஜிதப்பட்டது. அவன் உள்ளத்தில் வஞ்சகக் களிப்பு எழுந்தது. 'அவன் அரிவாள் ரொம்ப கனமில்லே,' என்றான் பின்னும்.

"அமாம். அவன் முரட்டு ஆளில்ல."

"அதுக்கு ஒப்பந்தம் இந்த ஊரிலேயே ஒருத்தன் கிட்டேயும் அரிவாள் கிடையாதே. நான் தானே செஞ்சு கொடுத்தேன் அதை," என்றான் கொல்லன்.

கண்டெடுக்கப் பட்ட அரிவாள் கிருட்ணனுடையது, பயிரைக் கசக்கியது அவன் தான்; வயலில் மறந்து வைத்து விட்டுப் போயிருக்கிறான்" என்றும் கந்தன் மனதில் நிதர்சனமாகப் பட்டுவிட்டது. கொல்லனிடம் விடை பெற்றுக்கொண்டு மனத்தெளிவுடன் அதை விட்டுக் கிளம்பினான்.

பின்னும் இரண்டு நாட்கள். பொழுதடைந்து விட்டது. வானம் கறுத்துக் கிடைத்தது. மேற்றிசையின் அடிவானத்தே அஸ்தமன சூரியன் ஜயசீலனாய்ப் பாசறையில் புகுந்து விட்டான். ஓடி யொளிந்திருந்த இருளவனும் திரும்ப வந்து இருள் மாயையை உலகில் பரப்பத் துடங்கினான்.

ஊருக்கு வெளியே ஒரு மைல். கிருட்ணன் தனியே வந்து கொண்டிருந்தான். குடி மயக்கம். அவன் வாயினின்று ஒரு 'டப்பா' கிளம்பி காற்றோடு கலந்து கொண்டிருந்தது.

திடீரென்று, பின்னாலிருந்து அவன் தலையில் ஒரு தடி அடி விழுந்தது. பலமான அடி. ஸ....ஹா! என்று கொண்டே நிலத்தில் உட்கார்ந்து விட்டான் கிருட்ணன். மேன்மேலும் பலமான அடிகள் மள மள வென்று உடலின் பல பாகத்திலும் விழுந்தன. அப்படியே மூர்ச்சித்து பிணம் போல் விழுந்து விட்டான்.

அதே இரவு மணி பத்திருக்கலாம். ஆண்டை வீட்டுப் புழக்கடை கதவு திறந்திருந்தது. கந்தன் குரலும், ஆண்டையின் குரலும் மாறி மாறிக் கேட்டுக் கொண்டிருந்தது.

"எங்கேடா வந்தாய் இந்நேரத்திலே. நான் தான் உன்னை பண்ணைக்கு வேண்டாம்னு சொல்லி விட்டேனே,' என்றான் ஆண்டை தோரணையாய்.

இந்த வார்த்தைகள் தான் கந்தன் காதுகளில் விழுந்தனவோ என்னவோ? அலட்சியமாய் சொல்கிறான் :—

"சாமி! அது போகுது. நான் பண்ணைக்கு வரத்துக்கு முன்னே ஒங்கிட்டே பண்ணைக்கு இருந்தானே கிருட்ணன்னு........"

சுகாதாரக் கும்மி

பரிசு பெற்ற பாடல்
ஒரு பெண்மணி பாடியது

பார்வையரே என்றன் பாங்கியரே !—கும்மி
பாடி விளையாடும் தோழியரே !
ஆவலொடு சுகவாழ்வை யடைவதற்
காகும் வழிகளைத் தேடுவீரே.

உள்ளம் உடலையே பற்றி நிற்கும்—இந்த
உண்மை மறந்திடலாகாதம்மா
தெள்ளத் தெளிந்த அறிவுடையோர்மொழி
தெய்வமொழி யென்றுணர்வாயம்மா.

மாசோடறியாமை நேசமாகித் தம்முள்
வாய்த்து மணஞ்செயும் காரணத்தால்
பேசுமுலகினில் நோய்களெனும்பல
பிள்ளைகள் வந்துபிறக்குமம்மா.

சுத்தமே என்றும் சுகமளிக்கும்—தீய
சோம்பலை ஓட்டித் துரத்துமம்மா
இத்தரை வாழ்வைப் பெருக்குமம்மா-அதற்
கிடெதுமில்லையான் சொன்னேனம்மா.

ஏதுமழுக்கிலா ஆகாயமே—உடற்
கென்று முறுதி பயக்குமம்மா
மோது கடற்கரை சென்றுலவி—உண்மை
முற்றுந் தெளிவுறக் காண்பாயம்மா.

கந்தையானாலும் கசக்கியுடு எனும்
கற்பனை போற்றி நடப்பாயம்மா
சுந்தரமேனி யுண்டாகுமம்மா—இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ அம்மா.

நித்தமும் ஈசன் திருமுடியில்—கங்கை
நீரைச் சுமந்து திரிவரென்றால்
சுத்த ஜலத்தின் குணங்களெல்லாம் எவர்
சொல்லி முடிக்கவும் வல்லாரம்மா.

மட்டுக்கு மிஞ்சிடில் வானமுதும்—குணம்
மாறி விஷமாகிப் போகுமம்மா
இட்டமுள்ள தோழித்தங்கமே ! நீயிதை
என்றும் மறவாதிருப்பாயம்மா.

சுண்டப் பசித்துண்ணும் வேளையிலே-பழஞ்
சோறும் சுவை யமுதாகுமம்மா
பண்டி நிறைந்தபின் உண்பவர்க்கு—நல்ல
பாலும் கசப்பாகிப் போகுமம்மா.

வேலை செய்யாது சோம்பேறிகளாய்—நிதம்
வீட்டிலிருப்பது மாகாதம்மா
மூலையிலிட்ட இரும்பு துரும்பேறி
மோசமாய்ப் போவதும் கண்டிலீரோ?

நோய்களுடலை அணுகிடாமல்—ஆயுள்
நூற்றினும் மேலாய் வளருமம்மா
தீய உணவை அகற்றிடம்மா—வேலை
செய்திட நித்தம் பழகிடம்மா.

வேலைகள் செய்துடல்வன்மைபெறின்-இந்த
மேதினி முற்றும் நமதேயம்மா
காலனையும் வென்று வாழ்வோமம்மா—ஒருக்
காலும் தளர்ச்சியுண்டாகாதம்மா.

நித்தமும் நோயாளியாகி ஐயோ—கங்குல்
நீங்காது நீண்டு கிடப்பவருக்
கெத்தனை செல்வமிருந்திடினும்—அதில்
யாதும் பயனுண்டோ சொல்லுமம்மா.

மன்னுயிர்க்காக உழைத்து நிதம்—சுக
வாழ்வை யளிக்க முயலுவோர்தம்
பொன்னுரை போற்றி யொழுகுவமேல்—
நாமும்
பூரண வாழ்வைப் பெறுவோமம்மா.

நாடும் சுகாதார சங்கமென்றும்—இந்த
நானிலத்தோங்கித் தழைக்குகவே
ஆடிவிளையாடும் தோழியரும்—நீண்ட
ஆயுளைப் பெற்று வளர்குகவே.

"ஆமாம். ஞாபகமிருக்கு. திருட்டுப் பயன்னா. அவனை விலக்கி விட்டு உன்னைப் போட்டேன், போன வருஷம். அதற்கு என்ன இப்போ ?"

'அவன் தான் பயிரைக் கசக்கியவன்'

'என்ன, அந்தப் பயலா' ?

ஆமாம், நான் காவலிருக்காத சமயம் பார்த்து, ஒங்க மேலேயும். என் மேலேயும் வஞ்சம் தீத்திக்கிறத்துக்காக இப்படிச் செய்திருக்கான்.'

'உனக்கெப்படித் தெரியும்? என் மேல் வர்மம் கொள்வதற்கு நியாயமிருக்கிறது. உன் மீது வர்மம் கொள்ள காரணம்?

"ஏன், நீங்க அவனுக்கு பதிலா என்னைத் தானே போட்டிருக்கீங்க. அது போதாதா ?"

சரி, அப்புறம் ?

"இந்த அரிவாள் அவனுது. எப்படின்னு கேட்பீங்க. கதிர் கசக்க வந்த அன்னிக்கு இருட்லே தெரியாமே வச்சுட்டுப் போயிட்டான். காலையிலே நான் கண்டெடுத்தேன். மூணு நாளா அதே வேலை. ஆண்டையோ பண்ணையை விட்டு விலக்கிட்டீங்க. பிழைப்பிலே மண் விழுந்து போச்சு. காரணம் யாரு? கண்டு பிடிச்சு வஞ்சம் தீர்த்துக்கணு மின்னு மனசு துடிச்சுக்கிட்டிருந்துச்சு. துப்பு விசாரிச்சேன். துலங்கிச்சு. அந்த மாதிரி அரிவாள் வேறே ஒருத்தன் கிட்டேயும் இந்த ஊரிலேயே கிடையாதுங்க. நான் அதைக் கண்டெடுத்த அன்னிக்கே அவன் அரிவாளையும் கெட்டுப் போக்கிட்டானாம். சுத்தப் பொய். வயலிலே வச்சுட்டுப் போயிட்டான். நிச்சமாய் அவன் தான்."

ஆண்டையும் பிரமித்து நின்றார்.

"குறையையும் கேளுங்க. இன்னிக்கு பொழுது போகவும் சாலையிலே ஓரமா நின்னுக்கிட்டு இருந்தேனுங்க. கிருட்ணன் குடிச்சுட்டு வந்திக்கிட்டு இருந்தான். இந்தத் தடியாலே அடியடின்னு அடிச்சுப் போட்டுட்டு வந்துட்டேனுங்க. என்னவோ ஆவேசத்திலேயும், வயற்றெரிச்சல்லேயும் செஞ்சுட்டேன். என்ன வந்தாலும் வந்துட்டு போவுதுன்னு. மனசு இப்பொத்தான் சமாதானப்பட்டுதுங்க. ஆனா ஒண்ணு, காக்காக்குக்கூட இந்த விஷயமே தெரியாதுங்க" என்று கூறி விட்டு பெருமூச்செறிந்தான் கந்தன்.

சிறிது நேரம் மௌனம். பின்னர் ஆண்டை பேசத்தொடங்கி, கந்தா ! அசட்டுப் பயலே ! எதுக்கடா இப்படிச் செய்தாய், ஹு-ஹு-ம் ! சொல்லிப் பிரயோசனமென்ன. நடந்தது நடந்தாகி விட்டது. இப்போ வீட்டுக்குப் போ. அப்புறம் பார்த்துக் கொள்வோம், நாளைக்கு கீழ்ப்புரவை அறுக்கணும். கருக்கலில் வந்துவிடு. வண்டியைக் கட்டிக் கொண்டு போகலாம், வந்துவிடு. விஷயம் ரொம்ப நன்றாகவிருக்கிறது" என்றார், ஆண்டை நெட்டுயிர்ப்புடன்.

'ஆகட்டும் சாமி,' யென்று விட்டு மன நிம்மதியுடன் வீடு திரும்பினான் கந்தன்.

காலக்கண்ணாடி

ஒரு யுவனின் குறிப்புப் புத்தக ஏடுகள்

(“பரத்வாஜன்” எழுதியது)

பி. ஏ. பாஸ் செய்த பிறகு நான்கு வருஷங்களை சுகமாகப் பெரியோர்கள் கட்டிவைத்த வீட்டில் பிணமாக்கினேனென்று சொன்னேனே? ‘சுகமாக’ என்ற வார்த்தை பிசகு.

அந்த நாலு வருஷங்களுக்குள்தான் என் மனம் படாதபாடுபட்டுக் கெடாத கேடடைந்தது. மனதிற்கும் சரீரத்திற்கும்கூட இவ்வளவு அவ்வளவு என்ற சிரமம் கிடையாது. இடைவிடாத ஏக்கத்தால் சோர்வுற்ற மனது, ஸதா எதிர்பார்த்ததால் பூத்துப்போன கண்கள்—அப்பா, என்ன வேதனை!

பி. ஏ. பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் அதற்குக் காரண மேற்பட்டது. மார்ச்சு மாதம்—அதாவது சித்திரை. காவேரி மணலிற் குன்றிப் போய்விட்டாள். (இந்த மேட்டூர் அணை வந்தாலும் வந்தது, காவேரியில் ஜலமே போய்விட்டது. பெருக்கென்பதே கிடையாது. பூரிப்பே கிடையாது. நதியின் அழகே போய்விட்டது. சித்திரையில் வற்றும் ஆறு, மாசியிலேயே மணலாகிறது.) எங்கு பார்த்தாலும் அவளுடைய ஊற்றுக் கண்கள்—ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள்போல. பெண்கள் ஊற்றுப் பட்டைகளால் அவைகளைத் துலக்கித் தூரெடுத்து பெரிதாக்கிப் பெருக்கி ஜலத்தைப் புதையல்போல அள்ளி எடுத்தார்கள்.

ஒருநாள் சாயந்திரம் ஆற்று மணலில் படுத்துக்கொண்டு சூரியன் ரணகளமாக அஸ்தமனமாகும் ஆர்ப்பாட்டத்தைக் கவனமின்றி பார்த்துக்கொண்டு ஏதோ யோசனையிலிருந்தேன். பார்த்த பொழுதெல்லாம் என் நெஞ்சைத் தடுமாற செய்த பெண் அவ்வான வெளியில் என் பார்வைக்குக் குறுக்கே குடத்துடன் சென்றது படுதாவில் பாவை பாய்ந்து செல்வதுபோன்ற ஒரு கனத்தோற்றத்தைக் கொடுத்தது............

அந்த ஸ்வப்னம் போன்ற நிகழ்விலும் அவள் பார்வை என் பார்வையில் பாய்ந்து மறைந்ததை தக்ஷணமே உணர்ந்தேன். அக்காவிரி ஊற்றைக் கொள்ளைகொள்ள வந்தவள் அத்துடன் என் மனதையும் ஒரே அடியாய்க் கொள்ளை கொண்டுவிட்டாள்.

அப்பொழுது என் மனதில் எழும்பியது ஒரு புது உணர்ச்சி. அதுவரையிலும் கண்டறியாத ஆத்யாத்ம, நினைவில்மட்டும் வர்ணித்து வாழ்த்தி மகிழ்ந்த என் உள்ளம் ஒரு பெண்ணிடம் ஈடுபட்டது. பூவைப் பறிக்கச் செய்யும் மகிழ்ச்சிபோல என்னுள் எழுந்த ஆசை என்னைத் தூண்டிற்று....

அவள் ஊற்றைப் பறித்தது என் உள்ளத்தைப் பறித்தது போல இருந்தது. சூரியன் மறைந்தான் பிறையும் நக்ஷத்திரமும் ஆஜர் கொடுத்தன. இரவும் பகலும் அகண்ட அணைப்பில் கலந்தன. அந்த நிமிஷம் இரண்டு உயிர்கள் உணர்ச்சி உலகத்தில் கலந்தன.

என்னைப் பேய்போல் பிடித்துக் கொண்ட இப்பெண் மயக்கம் என்னுள்ளப் பயிரின் வளர்ச்சியை பூச்சிபோல விழுந்து நருங்கலாக்கி விட்டது. கடைசியில் மூன்று வருஷத்து நரகவேதனைக்குப் பிறகு அப்பெண்ணுருவம் என் மனதை விட்டு அகலக் காரணங்கள் ஏற்பட்டு விட்டன வென்றாலும் இடைக்காலத்தில் என் ஊக்கத்தை உடைத்து, ஆங்கிலக் கவிதையென்னும் துறையில் என்னை இறக்கி அதில் நீந்த முடியாமலும் மூழ்க முடியாமலும் தவிக்கவிட்டது. சிருங்கார இசைகளை சிருஷ்டித்து என் மன மாதுக்கு மாலையாக இட்டேன். முனைந்து எதையும் செய்ய மனம் எழாமல் மேலாக சகலத்தையும் ஆராய விரும்பினேன். ஆகவே ஒன்றிலும் ஆழ்ந்த உணர்ச்சியின்றி வீண் பொழுது சென்றது. தேசத்தொண்டு புரியச் சென்றிருக்கலாம்; ஒரு பேதைப் பற்றால் தடுக்கப்பட்டுத் தடுமாறினேன். ஒரு தேசீயக் கல்லூரி ஆசிரியனாகவாவது சென்றிருக்கலாம். ஒன்றுமில்லை. ஆங்கில ஆசிரியனாகிவிடலாமென்ற வரட்டு ஆசையால் தூண்டப்பட்டு மேன்மேலும் படித்து, கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பலானேன். அல்ப சந்தோஷ மடைந்தேன். ஆங்கில ஆசிரியர்கள் சிலர் புகழ்ந்தெழுதிய கடிதங்களைப் படித்து மகிழ்ந்தேன். ஆனால் ஒருவரும் என்னை வெள்ளைக்கார உலகத்திற்கு அறிமுகம் செய்ய முன் வரவில்லை.

அப்பொழுது மனோபாவத்திற்கேற்றவாறு பாரதியாரின் கண்ணன் பாட்டுகள் கண்ணில் பட்டன. தற்செயலாக ஒரு புத்தகம் வாங்கிப் படித்தேன். அந்தச் செவ்விய கவிதை நவீன ஆங்கிலக் கவிதையில் ஊறிய என் மனதை (நவீன முறையையே பற்றியிருந்ததால்) இளக்கிற்று, ஞானரதம், பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு இவைகள் தேகத்தை புளகாங்கித மாக்கின. தமிழில் எழுத வேண்டுமென்ற அவா பிறந்தது 1925-ம் வருஷத்தில் தமிழ் நாடகமொன்றை முதன் முதலாக எழுதி முடித்தேன்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

வ. வே. சு. அய்யர் எழுதிய

குருகோவிந்த சிங்கன்

தபாற்கூலி யுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

அவன் ஒரு வாத்தியார்தான்! ஆனால்—

(டாணு எழுதியது)

குண்டுஸ்வாமி அய்யர் ஒரு பள்ளிக்கூடத்தில் சாதாரண உபாத்தியாயராகத்தான் இருந்தார். ஆனால் அவர் வாஸ்தவமாக இருக்கவேண்டிய இடம் அந்தப் 'பள்ளிக்கூட'மன்று; அறை அறையாகத் தடுத்து கிராதி போட்டு சுவர்களெழுப்பி இருக்கிறதே அந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கவேண்டியவர். இதைத் தவிர வேறெந்த உத்தியோகத்திலாவது இருந்திருந்தால் அவர் சேரவேண்டிய பள்ளிக்கூடத்தைக் கட்டாயம் சேர்ந்திருப்பார். ஆனால் இந்தக் கல்வித்துறை இருக்கிறதே இதில் செய்யும் திருட்டுத்தனம் அகப்படவே அகப்படாது. ஆகவே வெகு சவுகர்யமாக குண்டுஸ்வாமி அய்யர் அதில் வாழ்ந்து வந்தாரென்று சொல்லவேண்டும்.

குண்டுஸ்வாமி என்பது அவர் தந்தை வைத்த பெயர். பள்ளிக்கூடப் பிள்ளைகள் அவருக்கு வைத்திருந்த செல்லப்பெயர் 'உலக்கைத் தடி' ஏனெனில் அவருடைய தடித்தனத்தைக் கண்டால் பிள்ளைகளுக்கு அவ்வளவு வெறுப்பு. அது பயத்தினால் ஏற்பட்டது. வாய்க்கால்க் கரையிலோ, குளத்தங்கரையிலோ பிள்ளைகள் பிரத்யேகமாகக் கூடிப் பேசிக்கொண்டிருக்கும் தருணங்களில் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் ஒட்டுக் கேட்பது நல்லது. பிள்ளைகளைப் போன்ற போட்டோ காமிராக்கள் வேறில்லை. ஒரு உபாத்தியாயர் இருந்தால் அவருக்கு என்னென்ன விஷயங்களில் சபலம், அவருக்கு என்னென்ன திறமைகளுண்டு என்ற இரகசியத்தை சிலநாட்களில் கிரகித்துக் கொண்டு விடுவார்கள். அதற்குத் தகுந்தாற்போலப் பெயர்கள் வைத்து உபாத்தியாயர்களை அழைப்பார்கள். அப்பேர்ப்பட்ட சிறுவர்களால் நாமகரணம் செய்யப்பட்ட பெயர் கருத்து இல்லாது வைக்கப்படுமா?

எவ்வளவோ லட்சக் கணக்கான நல்ல உபாத்தியாயர்கள் இருக்கும்போது குண்டுஸ்வாமியைப் பற்றி நான் ஏன் எழுதப் புகுந்தேன் என்று கேட்கலாம். இப்போது குண்டுஸ்வாமி ஒரு'வகை' உபாத்தியாயர்களுக்குப் பிரதிநிதியாக நிற்கின்றான். தற்காலத்தில் அநேக பள்ளிக்கூடங்களில் இவனுடைய பிரதிபிம்பம் ஒன்றாவது இருந்து வருகிறது. ஆகவேதான் அவனைப்பற்றி எழுத நேரிட்டது.

அது ஒரு பிரைவேட் மானேஜ்மெண்டுக்கு உட்பட்ட பள்ளிக்கூடம். கணக்கு ஏதேதோ காட்டுவார்களேயன்றி கவர்ன்மெண்ட் கிராண்டைக் கொண்டுதான் பள்ளிக்கூடமே பிழைத்து வருகிறது. சம்பளம் நாலுமாதம் ஐந்துமாதம் பாக்கி நின்ற வண்ணமேயிருக்கும். ஆகவே அத்தனை உபாத்தியார்களும் வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக்கொண்டு பசி யுணர்ச்சியை நாசிகா சூர்ண உறிஞ்சலால் அடக்கிக் கொண்டு காலந்தள்ளி வருகிறார்கள். ஆனால் குண்டுஸ்வாமிக்கு மட்டும் குறைவேயில்லை. சம்பளம் மாதம் ஐம்பது ரூபாயென்று பெயரேயன்றி இந்தப் பத்து வருட காலத்துக்குள் அவன் இருபதாயிரம் ரூபாய்க்குமேல் சேர்த்து விட்டான். எப்படியென்றால் போகப் போகத் தெரியும்.

இதர உபாத்தியாயர்களுக்குக் குண்டுஸ்வாமியைக் கண்டால் பரம நடுக்கம். ஹெட்மாஸ்டர்கூட அவனிடம் யோசித்தே பேசுவார். ஏனெனில் அவர் அவனிடம் வாங்கியிருந்த 200 ரூபா கடனை இன்னும் திருப்பித் தரவில்லையல்லவா? அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒரு பகற் கொள்ளைக்கூட்டம் குண்டுஸ்வாமியின் கட்டை விரலின் கீழிருந்தது. அவன் விரலை அசைத்தால் அத்தனையும் அசங்கியே தீரவேண்டும். இந்தக் கொள்ளைக் கூட்டத்தின் தலைவனின் நடவடிக்கைகள் பலவிதமானவை. அந்தப் பலவிதத்தில் முதற்றரமானது பின்வருமாறு :—

ஊருக்குப் புதிதாக ஒரு பெரிய மனிதர் வருகின்றார்; அவருடைய குழந்தைகளை இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கிறார்களென்று வைத்துக் கொள்ளுவோம். பையன் எந்த வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை, மோப்பம் பிடித்துக் கொண்டே குண்டுஸ்வாமி போய் விடுவார். பையனுக்கு டியூஷன் சொல்லித்தர வாத்தியாயர் வேணுமாவென்று மூன்றாவது மனிதனை விட்டு விசாரிக்கச் சொல்வார். "தேவையில்லை" யென்று அந்தத் தந்தை சொல்லிவிட்டாலோ பள்ளிக்கூடத்தில் அந்தப் பையன் பாடு அதோகதிதான். பையன் வகுப்புக்குப் பாடம் சொல்லித்தரும் உபாத்தியாயர் அன்றைக்கிருந்து குண்டுஸ்வாமி சொல்லும்வண்ணம் ஆடவேண்டும். அந்தப் பையனுக்கு பரிட்சைகளில் மார்க் வராது. அரைவருஷப் பரீட்சையில் கட்டாயம் அந்தப் பையன் தோற்றே தீருவான். பையனுடைய பரிட்சைக் கடுதாசிகளில் பெரும்பாலானவை குண்டுஸ்வாமியின் அந்தரங்க கோஷ்டியிடம் அகப்பட்டுக் கொண்டதே பையன் 'பெயில்' ஆனதற்குக் காரணம்.

மெதுவாக ஒருநாள் குண்டுஸ்வாமி தானே நேரில் மாணவனின் தந்தையைப் போய்ப் பார்ப்பான். "ஸார் உங்க பையன் கிளாஸில் ரொம்ப மட்டமா யிருக்கிறான் ஸார். இந்த சமயத்தில் நீங்க நாலு காசைப் பார்க்கலாமோ. நான் வேணுமானால் நல்ல வாத்தியாரை அனுப்புகின்றேன். மாதம் 20 ரூபா கொடுத்தால் போதும்." என்று அளப்பான். வேறு வழியின்றி தந்தை ஒத்துக்கொள்ள வேண்டிவரும். மாதாமாதம் யாரோ ஒரு உபாத்தியாயருக்குத் தரப்பட்ட டியூஷன் கூலி 20 ரூபாயில் 10 ரூபா குண்டுஸ்வாமியின் பைகளுள் புகுந்து விடும். ஏதோ ஓர் இராப்பட்டினி உபாத்தியாயர் இந்தப் பையனுக்குத் தினம் பாடம் அழுவதற்கு வந்து சேர்வார்.

குண்டுஸ்வாமி கீழத்தெரு மூலைவீட்டில் காலை வேளை மந்தை நடத்தி வந்தான். சுமார் 50 பையன்க்ள் அங்கு தினம் வருவது வழக்கம். அதெல்லாம்

மலிவான டியூஷன்கள். மூர்மார்க்கெட் வியாபாரம் போல எந்தக் கிளாஸாயிருந்தாலும் ஐந்தைந்து ரூபா தட்சிணை தந்தால் போதுமானது.

'குண்டுஸ்வாமி டியூஷன்' என்றால் பையனுக்குப் பாஸாகுமோ பெயில் ஆகுமோ என்ற சமுசயமே தேவையில்லை. சரியாக பரிட்சைக்குச் சில தினங்களுக்கு முன் தனிப் பரிட்சையொன்று குண்டுஸ்வாமி வீட்டில் நடைபெறும். அந்தப் பரிட்சையில் என்னென்ன கேள்விகள் போடப்படுகின்றனவோ அவைகளில் பெரும்பாலானவை பள்ளிக்கூடப் பரிட்சைப் பேபர்களிலும் தோன்றும். குண்டுஸ்வாமிக்கு ஏதோ சக்தி பூஜை இருப்பதாகவும் அவருக்குப் பரிட்சைக் கேள்விகள் முன்னாடியே தெரிந்துவிடுமென்றும் சிலர் பேசிக்கொள்வார்களாம்.

குண்டுஸ்வாமியிடம் டியூஷன் சொல்லிக்கொள்ளும் பையன் கடைசிவரை தைரியத் தோடேயே இருக்கலாம். ஏனெனில் வாங்கும் காசுக்கு ரொம்ப யோக்யமாக நடப்பவன் குண்டுஸ்வாமி. பரிட்சைக் கடுதாசிகள் யார் யாரிடம் திருத்தப்படப் போகின்றனவென்ற ஜாப்தா குண்டுஸ்வாமியைத் தவிர வேறு யாருக்குத் தெரியும். கடைசி காலாந்திரத்தில் இப்படி சுலபமாகப் பாஸ் வாங்கித்தரக் கூடிய வாத்தியார், தினந்தோறும் பாடஞ் சொல்லித் தந்து பிள்ளைகளைக் கஷ்டப்படுத்த வேண்டிய அவசியமில்லை யல்லவா?

குண்டுஸ்வாமியின் 'காங்கு'க்கு உட்பட்ட உபாத்தியாயர்களுக்கு ஒரு நிரந்தர இரகஸ்ய உத்தரவு உண்டு. அதாவது யாரும் பள்ளிக்கூடத்துக்குள் சரியானபடி பாடஞ் சொல்லித்தரலாகாது என்பதே அந்த உத்தரவு. ஆகவே ஒரு வகுப்பில் 50 மாணவர்களிருப்பின் 40 மாணவர்களாவது டியூஷன் வைத்துக் கொண்டல்தான் உருபடுவார்களென்பது உறுதி. பத்திரிகைத் தொழிலில் ஒரு பெரிய இரகஸ்யமுண்டு. அதாவது பத்திரிகையின் பிரதிகள் குறையக்குறைய விளம்பரத் துறையில் வருமானமதிகம் என்று சில பொறுப்பாசிரியர் கணக்குக் கூறுவர். அந்த ரீதியில் பள்ளிக்கூடத்தில் சொல்லித் தருவது குறையக் குறைய 'பிரைவேட்' வருமானம் உபாத்தியாயர்களுக்கு எதேஷ்டமாய்க் கிடைக்குமென்பது கல்வித் துறையிலுள்ள ஓர் உண்மை.

பள்ளிக்கூடத்தில் ஒரு நாற்காலி பண்ண வேண்டுமென்றாலும், பையன்கள், பென்சல் புத்தகம் வாங்கவேண்டுமென்றாலும் வருஷாந்திர விழாவுக்கு பிரைஸ் புத்தகங்கள் வாங்க வேண்டுமென்றாலும், பிள்ளைகள் தமாஷாக ஒரு நாடகம் நடிக்க வேண்டுமென்றாலும் எல்லாம் குண்டுஸ்வாமியின் மூலமாகவே நடைபெறவேண்டும். அப்படி சூத்திரதாரியாக அவன் பள்ளிக்கூடத்தில் இருந்தான். இந்த மாதிரி இருப்பதால் குண்டுஸ்வாமிக்கு என்ன அநுகூலமென்பதைச் சொல்ல வேண்டுமா?

ஒரு உபாத்தியாயர் வேலை பள்ளிக்கூடத்தில் காலி யிருப்பதாக வைத்துக்கொள்வோம். குண்டுஸ்வாமியிடம் சிபார்சு பெற்றுவிட்டால் கட்டாயம் அந்த உத்தியோகம் கிடைத்துவிடும். ஊரில் ஏதாவது எலெக்ஷன் வருவதா யிருந்தாலும் குண்டுஸ்வாமி எந்தக் கட்சியோ அந்தக் கட்சிதான் வெற்றிபெறும். அவனது கயிறு ஓடுகின்ற இடத்திலெல்லாம் அவனுடைய பிரசாரமும் ஓடும். ஊரிலுள்ள குழந்தை பெற்ற பிரமுகர்களெல்லாம் அவன் வலையில் அகப்பட்டவர்களே. அந்த சக்தியை அவன் உபயோகிக்காதிருப்பானா?

ஊருக்கு ஒரு சர்க்கஸ் வந்தது. சர்க்கஸ்காரனுக்கு வசூலே யாகவில்லை. அதன் மானேஜர் குண்டுஸ்வாமியைப் போய்க் கேட்டான். அவ்வளவுதான். அந்தப் பள்ளிக்கூடப் பையன்களுக்கு அரைசார்ஜ் என்று மறுநாளே ஒரு அறிக்கை காணப்பட்டது. ஸர்க்கஸ்காரனும் பிழைத்தான். குண்டுஸ்வாமியின் குடும்பத்துக்கும் அவன் காங்குக்கும் இனாம் டிக்கட்டுகள் கிடைத்தன.

புத்தகப் பிரசுராலயக்காரர்களைக் குண்டுஸ்வாமி ஆட்டி வைத்ததுபோல வேறு யாருமே ஆட்டி வைத்ததில்லை. யாராவது ஒரு பிரசுரகர்த்தா குண்டுஸ்வாமியிடம் விறைத்துக்கொண்டால் அடுத்த வருடத்தில் அந்தப் பிரசுராலயத்தின் புத்தகம் ஒன்றுகூட அந்தப் பள்ளிக்கூடத்தில் இல்லாது போய் போய்விடும். குழந்தைகளின் பெற்றோர்களைப் பற்றி அவனுக்குக் கவலையே யில்லை.

துரைத்தனத்தால் அங்கீகரிக்கப்பட்ட புத்தகம் என்று போட்டிருந்தால் போதுமா? குண்டுஸ்வாமியாராலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் தானே அந்தப் புத்தகத்துக்கு அந்தப் பள்ளிக்கூடத்தில் ஆதரவு கிட்டும்!

ஊருக்கு ஒரு இராமாயண சாஸ்திரி வந்தார். ராமாயணம் படிக்க இடம் வேண்டுமென்றால் குண்டுஸ்வாமியின் தயவிருந்தால் பள்ளிக்கூடக்கட்டிடம் இரவு வேளைகளில் கிடைக்கும். அன்றாடம் பிரசாதம் மட்டும் சட்டியோடு குண்டுஸ்வாமி வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்.

பள்ளிக்கூடத்தில் எந்தெந்தப் பையன்கள் கல்யாணத்துக்கு நிற்கிறான் என்ற ஜாப்தா குண்டுஸ்வாமிக்குத்தான் தெரியும். எத்தனையோ தொழில்களோடு இந்த விவாகத் தரகுத் தொழிலிலும் அவன் ஈடுபட்டிருக்கிறான். பெண்ணை வைத்துக்கொண்டு தவிப்பவர்கள் அவனைப் பேட்டி கண்டால் போதுமென்று சொல்கிறார்கள்.

'ஆசாரியர்' என்றால் 64 கலைகளில் வல்லவர்களா யிருக்க வேண்டுமென்று பழைய புராணங்கள் சொல்லும். நமது குண்டுஸ்வாமிக்கு ரூபா அணா பைசா வரும்படி விஷயத்தில் 100 கலை தெரியும். எம்.ஏ., பி.எஸ்.ஸி., படித்த உபாத்தியாயர்களெல்லாம் சோற்றுக்கே லாட்டறி யடித்துக்கொண்டிருக்கும் காலத்தில் இந்த சாதாரண உபாத்தியாயர் எப்படி மாதாமாதம் 300, ரூபா பாங்கியில் போடுகிறாரென்பது ஒரு பெரிய புதிர்தானே.

வருங்காலத்து இந்தியாவின் பிரஜைகளைத் தயார் செய்யும் தொழிற்சாலை பள்ளிக்கூடம் என்பது. குண்டுஸ்வாமி போன்ற உபாத்தியாயர்களிடம் குழந்தைகளை ஒப்படைத்தோமானால் குழந்தைகளின் மனோபாவம், திறமை எல்லாம் எப்படி யிருக்குமென்று சொல்ல வேண்டுமா? நாலு பள்ளிக்கூடத்தில் ஒரு பள்ளிக்கூடத்திலாவது குண்டுஸ்வாமியின் பிரதிபிம்பம் ஒன்றிருப்பதாகக் கேள்வி. இவர்களுடைய கூட்டம் உபாத்தியாய உலகில் அதிகமாகிவிட்டால் அப்புறம் பள்ளிக்கூடப் பையன்கள் கடைத் தேறுவார்களா, மாட்டார்களா என்ற கவலையே யாருக்கும் வேண்டாம்.

[இந்த நடைச் சித்திரம் கற்பனையேயாயினும் ஒவ்வொரு தந்தையும் கவனிக்கவேண்டியதா யிருக்கின்றது.

சங்கு. ப-ர்.]

உடம்பு

(கவிஞர்மணி சி. சுப்பிரமணிய பாரதியார்)

உடம்பை வலிமை செய்வதற்கு மன வலிமை வேண்டும். கஸரத் முதலிய பழக்கங்களில் உடம்பு பலமேறுவதற்கு மனவுறுதியும் ஆசையுமே முக்கிய காரணங்களாக வேலை செய்கின்றன.

இராமமூர்த்தி முதலிய நமது நாட்டுப் பலவான்களும் ஸாண்டோ முதலிய அந்நிய நாட்டுப் பலவான்களும் இவ்விஷயத்தை மிகவும் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். கையிலே தண்டு முதலியவற்றை எடுத்துச் சுழற்றும்போது வீமசேனனை நினைத்துக் கொள்ள வேண்டுமென்று எங்களூரிலே ஒரு "பஹல்வான்" சொல்லுவார். பிராணாயாமத்தை மாத்திரமேயன்றி 'தியானம்' முதலிய யோக முறைகளையும் இராமமூர்த்தி பெருந்துணையென்று சொல்லியதுண்டு.

ஸாண்டோ தனது "டம்பெல்ஸ்" என்று சொல்லப்படும் இருப்புக் குண்டுகளை வைத்துப் பழகுவோர் வெறுமே கைகளில் குண்டைத் தூக்கி அசைத்தால் பிரயோஜனமில்லை யென்பதை மிகவும் தெளிவாக எழுதியிருக்கிறார். குண்டைப் பிடித்து உறுதியுடன் முன்னே நீட்டிய கையை மடக்கும்போது உனது மனோபலம் முழுவதையும் கைத் தசைகளிலே செலுத்தி மெதுவாக மடக்க வேண்டும். கவனத்தை மற்றொரு பொருளிலே செலுத்தினால் தசைகளுக்குச் சரியான வலிமை யேறாதென்கிறார்.

உடம்பு நாடிகளுக்கு வசப்பட்டது; நாடிகள் மனதின் வசமாகும். ஆகையால் உடம்பிலுள்ள நோய்களைத் தீர்த்து வலிமை யேத்துவதற்கு மனவுறுதி, நம்பிக்கை, உத்ஸாகம் முதலிய குணங்கள் பிரதானமாகக் கொள்ளத் தகும்.

உணவு

இந்திரப்ராஸ்த நகரத்தின் கடைசி க்ஷத்திரிய அரசனாகிய பிருதிவிராஜனுடைய ஸேனாதிபதிகளிலே சாமுண்டராய் என்றொருவன் இருந்தான். வடக்கத்து மகமதிய அரசருக்கெல்லாம் அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுக்க முண்டாகும்படி அவன் அத்தனை வீரமும், யுத்தத் திறமையும் கொண்டு விளங்கினான். அவனுடைய சரீர வலிமையை அக்காலத்தில் பாரத தேச முழுதிலும் நிகரற்றதாக கொண்டாடினார்கள். அவனுக்குச் சாமுண்டி யுபாசனையுண்டு. விரதங்கள், கண் விழிப்புக்கள், தியானங்கள், வ்யாயாமங்கள், இவற்றிலேயே தன் கால முழுதுங் கழித்தான். இவன் உணவு கொள்ளும்போது வீமனைப்போல் அளவில்லாத பசியுடன் உண்பானென்று "ப்ருதிவி ராஜ் ராஸா" என்னும் தமது காவியத்தில் சந்தகவி எழுதி யிருக்கிறார். வீமனுடைய பெயர்களில் வ்ருகோதரன் என்பதொன்று. அதாவது 'ஓநாய் வயிறுடையவன்' என்றர்த்தம். இது அவனுக்கிருந்த நேர்த்தியான பசியைக் கருதிச் சொல்லியது. இக்காலத்திலே குறைவாக உண்ணுதல் நாகரீகமென்று நம்மவரிலே சிலர் நினைக்கிறார்கள். பெருந் தீனிக்காரன் என்றால் அவமதிப்புண்டாகிறது. சிரார்த்தத்திலே சோறு தின்று முடிந்தவுடன் எழுந்திருக்க முடியாமல் கஷ்டப்படும் சில பிராமணார்த்தக்காரரைப் போல் சரியான பலமில்லாமல் உடம்பைக் கொழ கொழவென்று வைத்துக் கொண்டு நமக்கு ருசியை மாத்திரம் கருதிப் பெருந் தீனி தின்பவனைக் கண்டால் அவமதிப்புண்டாவது இயற்கையேயாம். சிங்கம் புலிகளைப் போல உடல் வலியும் அதற்குத் தகுந்த தீனியும் உடையவனைக் கண்டால் யாருக்கும் அவமதிப்புண்டாகாது. சாதாரணமாக பயமுண்டாகும். நானாவிதமான விலையுயர்ந்த உணவுப் பொருள்களைத் தின்றால்தான் உடம்பிலே பலம் வருமென்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு. கார சாரங்களும் வாசனைகளும் உண்டாக்கி ருசியை அதிகப்படுத்தும் வஸ்துக்கள் தேக பலத்துக்கு அவசியமில்லை. கேப்பைக்களி, கம்பஞ் சோறு இவற்றால் பலமுண்டாவது போல் பதிர்பேணியிலும், லட்டுவிலும், வெங்காய சாம்பாரிலும் உண்டாகாது.

பசி

சரீரத்தை வியர்க்க வியர்க்க உழைத்தால் நல்ல பசி யுண்டாகும். நல்ல பசி யிருக்கும்போது கேப்பைக் களியை வேண்டுமளவு தின்று சுத்த ஜலத்தைக் குடித்தால் போதும். விரைவிலே பலம் சேர்ந்துவிடும். பிள்ளைகளை இஷ்டப்படி நீஞ்சுதல், மரமேறுதல், ப்ந்தாட்டம் முதலிய விளையாட்டுக்களிலே போகவொட்டாதபடி தடுக்கும் பெற்றோர், தாமறியாமலே மக்களுக்குத் தீங்கு செய்கின்றனர்.

வயது

மேலும் சரீர உழைப்பும் விளையாட்டுக்களும் மிகவும் வாலிபப் பருவத்திலே யிருக்கும் பிள்ளைகளுக்கு மாத்திரந்தான் பொருந்து மென்று ஒரு தப்பெண்ணம் சிலரிடம் ஏற்பட்டிருக்கிறது. மனிதனுக்கு இயற்கை வயது நூறு. ஆகையால் ஐம்பது வயதாகும் வரை ஒருவன் இளமை தீர்ந்தவனாக மாட்டான். பிஞ்சிலேயே உடம்பை நாசப்படுத்தினால் சீர்கெட்டுக் குலைந்துபோய் இருபது வயதாகு முன் கிழத்தன்மை வந்துவிடும். எனினும் இயற்கை விதிப்படி ஐம்பது வயது வரை இளமை நிற்குமாகையால் அதற்குள்ளே "செயற்கைக் கிழத்தன்மை" பெற்றோர் தமதுடம்பைத் திருத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முயற்சி செய்யலாம். ஐரோப்பாவிலே ஐம்பது வயதுக்காரர் ஆடியோடி விளையாடுவதும், பந்தடிப்பதும், கூட்டங் கூடிக் குதிப்பதும் சாதாரணமாகப் பார்க்கலாம். நமது நாட்டுக் கல்வியாளர் சிலர் முப்பது வயதாகு முன்னாகவே தம்மைக் கிழவர்களாகப் பாவனை செய்து கொண்டு ஜீவக்களை யில்லாமல் சஞ்சரிக்கிறார்கள்.

பெரிய மனுஷத் தன்மை

இன்னுமொரு தொல்லை. பெரிய மனுஷத் தன்மைக்கும் சரீர உழைப்புக்கும் விரோதமென்று நம்மவர் சிலரின் மனதில் எந்தப் பிசாசோ எழுதி வைத்து விட்டது. ஆகையால் சொற்பப் பணமுடையவன் கூடத் தனக்கு ஜலம் கொடுங்க ஓராளும், குளிப்பாட்ட ஓராளும், தலை துவட்ட ஓராளும் வைத்துக்கொண்டு பாயோடே கிடக்கும் கிழவியைப் போல நடந்து கொள்கிறான். மாதம் முப்பது ரூபாய் சம்பளம் வந்தால் போதும். வீட்டிலே

அவன் "பெரிய நவாப்." கை காலை அசைக்க மாட்டான். மேல் மாடத்திலே போய் ஒரு புஸ்தகம் அல்லது மேல் வேஷ்டி எடுத்துக்கொண்டு வர வேண்டுமானால், தான் போகமாட்டான்; பந்துக்களை ஏவுவான். வயதிலே சிறியவர்களாக இருந்தால் அவர்களை விலையடிமை போல நடத்துவான். அற்ப காரியங்களுக்கெல்லாம் ஒருவரை யொருவர் வேலையேவி வதைக்குந் தொல்லை நமக்குள்ளே மிக அதிகம்.

முடிவுரை

எவனும் உடம்பை உழைப்பினாலும், அசைவினாலும் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். மனதை உத்ஸாஹ நிலையில் வைத்துக் கொண்டால் உடம்பிலே தீவிரமுண்டாகும். உடம்பைத் தீவிரமாகச் செய்து கொண்டால் மனது உத்ஸாஹத்துடனிருக்கும். மனத்தளர்ச்சிக்கு இடங் கொடுக்கலாகாது. கவலை மனிதனை அரித்துக் கொன்றுவிடும். பயத்தை உள்ளே வளர்ப்பவன் பாம்பை வளர்க்கிறான்.

இயன்ற வரை இந்திரிய இன்பங்களை அடக்கியாள வேண்டும். இந்திரிய சுகங்கள் கூடாவென்று நான் சொல்லவில்லை. அவை பரமாத்மாவால் நியமிக்கப்பட்டன. இராமன், கிருஷ்ணன் முதலிய அவதார புருஷர்கள் இந்திரிய இன்பங்களைத் தள்ளி வைக்கவில்லை. மனிதன் உலகத்தில் எப்படி நடக்கவேண்டு மென்று வழி காட்டிக் கொடுக்க வந்த அந்தத் தேவ புருஷர் உலக இன்பங்களை நீக்கித் துறவு கொள்ளவில்லை. ஆனால் இந்திரிய சுகங்களுக்கு வசப்பட்டுப் போகலாகாது. அதனால் தேக பலம் அழிந்து மேற்படி இந்திரிய சுகங்களை நீடித்து அனுபவிக்க வழியில்லாமல் போய்விடும். அறிவுதான் ராஜா; மனமும், இந்திரியங்களும், உடம்பும் அறிவுக்கடங்கி வாழவேண்டும். இல்லாவிட்டால் அவற்றிற்கே கெடுதி யுண்டாகும்.

எனவே மனவுறுதி, சந்தோஷம், உலகை நடத்தும் சக்தி, நமக்கு நன்மை செய்யுமென்ற நம்பிக்கை, சரீர வுழைப்பு முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு ஊக்கத்தை வழக்கப் படுத்த வேண்டும்.

உடம்பிலே நோவில்லாமல் வலிமையுடன் இங்கே நூறாண்டு வாழலாம்.

அருங்கலை

(கு. ப. ராஜகோபாலன் எழுதியது)

கலை என்ற பதத்திற்கு ஏற்பாடு என்று பொருள். காவியம், ஓவியம், சிற்பம், ஸங்கீதம்—இவைகளை அருங் கலைகள் என்று சொல்லுகிறோம். அநித்தியக் களஞ்சியமான 'இயற்கை' எனப்படும் உலக வாழ்க்கையில் சமுத்திரத்தில் ரத்னங்கள் போல ஆழ்ந்துகிடக்கும் நித்தியத்தின் துணுக்குகளைக் கண்டு களிப்பது உலகத்தின் விடியற் காலை முதல் மனிதனின் மனப் போக்கு. அப்படிக் கண்டுணரப்படும் தங்கத் தூள்களைத் தட்டான் ரஸம் விட்டுப் பிடித்துச் சேர்த்து உருக்கி நகையாக்குவதுபோலக் கலைஞன் தன் கல்பனா சக்தி என்ற நெருப்புச் சட்டியில் உருக்கித் தத்வ உருவமாக அடித்துவிடுகிறான். இரண்டே மாதத்தில் ஜால வித்தைபோலக் குபீலென்று பச்சைப் பவழச் சாயல்களுடன் தோன்றி மறையும் இளவேனிலின் இளமையைக் கால வரையற்ற நித்திய யௌவன ரூபமாக்குகிறான் கவிதன் காவியத்தில்; வாழ்க்கையின் செழிப்பில் நாய்க்குடை போல நின்று காலத்தில் கருகும் பூவனப்பையும் பெண் வனப்பையும் சித்தரத்தில் சனாதனமாக்குகிறான் வர்ணக்காரன் தன் சலாகையால்; உயிரின் உன்னத அன்புகளைக் கல்லில் சிலாசாஸனம் போல செதுக்கி நிறுத்துகிறான் சில்பி தன் உணர்ச்சி உளியால்; ஸங்கீதமோ மனிதனின் ஏக்க அலைகள் பொங்கி எழும் பாற்கடல்.

இப்படிச் சிதறிக் கிடக்கும் நித்தியத்தின் அம்சங்களை ஒருங்கு சேர்த்து விச்வாமித்திரனைப் போலக் கலைஞன் மறுவோர் சிருஷ்டிக்கே மூலபுருஷனாகிறான். ஈச்வர சிருஷ்டியிலிருக்கும் கல்மஷத்தை, பாற்கடலைக் கடைந்து விஷத்தை எடுத்து விட்டதுபோல எடுத்து, கலைஞன் எஞ்சிய அமிருத ஸாரத்தை சாச்வதமாக்குகிறான். இந்த முறையில் அருங்கலை, சிருஷ்டியின் வளர்ச்சியையே ஊகித்துவிடுகிறது. காளிதாஸனின் சாகுந்தலம், ரவிவர்மனின் மோகினி, மதுரைக்கோவிலின் காளி, க்ஷேத்திரீய பதங்கள் இவைகள் உலகின் உச்சாணிக் கிளையின் கனிகள்; வாழ்க்கையைத் தூண்டி யெழச் செய்யும் உத்தம அவாவின் காரணங்கள், அதை வழிப்படுத்தும் கருவிகள், உயிரின் வழி காட்டிகள்; அவைகளை அண்ணாந்து பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்து அவைகள் போலவே தவ உருவமெடுத்துத் துருவனைப்போல நித்தியஸ்தானம் அடைய வேண்டுமென்று உயிர் ஏங்குவதற்கு மூலஸ்தானங்கள்.

ஆகையால் இயற்கையும் அருங்கலையும் ஒன்றல்ல. அருங்கலை, சிலர் சொல்வதுபோல, இயற்கையின் புகைப் படமல்ல. சேற்றில் தாமரைபோல இயற்கையில் அருங்கலை உற்பத்தியாகிறது. இயற்கையைமீறிச் சென்று மலருகிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு தான் மகாகவி கீட்ஸ் 'காவியம் நம்மை ஒரு சுகமான மட்டின்மையால் அதிசயப்படச் செய்யும்' என்று அனுபவத்துடன் கூறினான்.

இயற்கையிலிருந்து பிரித்தெடுக்கப் படுவனதான் தத்துவத்தின் துண்டுகள் என்றறிய எது உரைகல்? கலைஞனின் கல்பனா சக்திதான். அதற்கும் கீட்ஸ் 'மனோபாவம் எதை அழகெனக் கவருகிறதோ அதே தத்வம்' 'அழகே தத்வம், தத்வமே அழகு' என்றும் சொல்லுகிறான். இயற்கையில் எது அழிவற்றது என்பதைக் கலைஞன் அமானுஷ்யமான சக்தியால் ஊகித்துப் பிரித்தெடுத்து அதற்கு உயிர் வார்த்து விடுகிறான். அச்சமயம் அவன் தன்னையே மறந்து, தன்னைமீறி, தான் எடுத்துரைக்க முடியாமல் தன்னுள் மின்னல் போல் உதிக்கும் ஒரு குரலற்ற அசரீரியின் ஒளியில் தன் கல்பனை யுலகத்தைக் கண்டு விடுகிறான். அக்காக்ஷியால் ஏற்படும் அருள் காளியின் பீஜாக்ஷரத்தைப் போலச் சொல் வெள்ளத்தை யுண்டாக்குகிறது. மெய்மறந்த வாக்குப் பெறுகிறான். அது காவியத்தில் சொல்லின் பதத்தை ஊட்டுகிறது; சித்திரத்தில் வர்ண வரிசையைப் பெறுகிறது; சிற்பத்தில் சிலைச் சுந்தரமாகிறது; ஸங்கீதத்தில் ரஸம் ராகமாகிறது.



நாகஸ்வரம் வீருசாமி பிள்ளை

(ஈ. கிருஷ்ணய்யர் எழுதியது)

தென்னிந்தியாவில் நாகஸ்வர வாத்யத்தை அறியாதார் இலர். இந்நாளில் அதை 'நாதஸ்வரம்' என்று அழைக்கின்றனர். 'க' வுக்குப் பதிலாக 'த' என்ற அக்ஷரம் எதற்காகப் புகுத்தப்பட்டதென்று நன்கு விளங்கவில்லை. நாதஸ்வரம் என்றுல்தான் அதற்குப் பெருமை ஏற்படுவதாக அதைக் கையாளும் சில தொழிலாளர் நினைக்கின்றனர். உண்மையில் அதை நாகஸ்வரமென்றுதான் அழைக்க வேண்டுமெனப் பண்டிதர்களும் பழைய சம்பிரதாயங்க ளறிந்தோரும் கூறுகின்றனர். நமது வாழ்நாட்களில் அன்னப்பிராசன முதற்கொண்டு அந்திய காலம் வரை ஒவ்வொரு வீட்டிலும் நடத்தப்படும் அநேக வைதீக லௌகிக விசேஷங்களுக்கு இவ்வாத்தியம் மங்களகரமானதாகவும் இன்றியமையாததாகவும் கருதப்பட்டு வருகிறது. தவிர தென்னுட்டில் கோயில் இல்லாத கிராமம் கிடையாது. நாகஸ்வர சேவையில்லாத கோயிலும் இருப்பது அரிது. இவ்வாத்தியத்தை கிராமத்துக்கு கிராமம் கோவிலுக்குக் கோவில் அமைத்து, நமது வாழ்நாட்களில் ஓர் முக்கிய அம்சமாக ஏற்படுத்தி யிருப்பதன் மூலம் நமது முன்னோர்கள் கர்னடக சங்கீதத்தை என்றும் அழியாத முறையில் ஸ்தாபித்து வளர்த்து வந்திருப்பது வியக்கத்தக்கதே. இதைப் 'பெரிய மேளம்' மென்றும், 'நாயனம்' என்றும் கூறுவார். குறைவற்ற ஆதரவுடன் நெடுங்காலமாக வளர்க்கப்பட்டு வருவதால் இதில் தலைமுறை தலைமுறையாக பெயர்பெற்ற வித்வான்கள் அநேகர் இருந்திருக்கின்றனர். தற்காலத்திலும் ஐந்தாறு வித்வான்கள் நல்ல கீர்த்தியுடன் விளங்குகின்றனர். அவர்களில் திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளையும் திருவிடைமருதூர் வீருசாமிப் பிள்ளையும் முதன்மையாகக் கருதப்படுகின்றனர்.

வீருசாமிப் பிள்ளையவர்கள் மேளத்தைக் கேளாதோர் மிகச் சிலரே. கேட்ட பின் அவர் வழியைப் பின்பற்ற வேண்டுமென்ற அவாக்கொள்ளாதோரும் இருப்பதரிது. ஒரு பாடகரிடம் நல்ல சாரீரம், அதிகப் படிப்பு, அரிய சாதகம் எல்லாம் சேர்ந்திருக்கலாம். அவைகளுக்காக அவர் போற்றப்படலாம். எனினும் பிரத்யேகமான வழி அமைவது இவைகளால் மாத்திரமல்ல. இவைகளிற் சில இருந்தும் இல்லாதிருப்பினும், கேட்டவுடன் மனதைக் கவரும் தனிப்பட்டதோர் 'பாணி' சிலரிடமே தோன்றி யிருப்பதைக் காணலாம். இது ஒரு வித்வானுக்கு உடன் பிறந்த இயற்கையென்றே பெரும்பாலும் சொல்லவேண்டும். செயற்கையினுல் மாத்திரம் அதிகம் வந்துவிடாது. வீருசாமி பிள்ளையவர்கள் அத்தகைய இயற்கையா யமைந்த அழகியதோர் வழியைக் கொண்டவர் எனலாம். கேட்டவுடன் அவ்வழியை பின்பற்ற வேண்டுமென்ற ஆசையைக் கிளப்பும் விஷயத்தில் வாய்ப்பாட்டில் ராமானுஜ அய்யங்கார் சங்கீதம் எவ்வாறு தோன்றுகின்றதோ அவ்வாறு நாகஸ்வரத்தில் பிள்ளையவர்கள் வழியும் தோன்றுகிறது என்று ஒருவாறு சொல்லலாம். ஆனல் பிறர் பற்றிக்கொள்ளக்கூடிய வழியாயிருப்பது மாத்திரமன்றி இன்னும் போற்றத்தக்க அம்சங்களும் கொண்டதாக இருக்கிறது.

அவர் வாத்யத்தைக் கேட்கும்போது முதல்முதலில் நமக்கு நன்கு தென்படுவது அவர் வெளியிடும் அழகிய நாதமேயாகும். அதிக இனிமையுடன் மிருதுவும் கொண்டது. ஸாதாரணமாய் நாகஸ்வரம் அதிக சப்தமுள்ளது. அருகிலிருந்து கேட்டால் காதைத் துளைப்பதுபோ லிருக்கும். அந் நாதத்தை அடக்கி அருகில் கேட்டாலும் மிருதுவான ஒலியுடன், காதுக்குக் குளிர்ந்த உணர்ச்சி கொடுக்கும் வாத்தியத் திறமையில் ராஜரத்னம் பிள்ளையவர்களும் இவரும் மேம்பட்டிருக்கின்றனர். இத்தகைய நாதத்தை அடிப்படையாகக் கொண்டு வீருசாமி பிள்ளை கற்பிக்கும் ஸங்கீதமும் அருமையாக விளங்குகிறது. மனே தர்மத்துடன் அதிக மெருகும் கொண்டது. அவரிடம் விசேஷமாய்க் கேட்கவேண்டுவது ராகங்களே. அவைகள் யாவும் அழகிய அமைப்பு வாய்ந்ததாகவே காணப்படும். கற்பனைச் சங்கதிகளும் ஸஞ்சாரங்களும் கஷ்டமில்லாது ஸரஸமாய் ஒன்றுக்குப் பின் ஒன்றுக நல்ல வடிவத்துடனே தோன்றும். நல்ல பொருத்தத்துடனும் ஒழுங்காயும் அமைக்கப்பட்டிருக்கும். 'அநுஸ்வரங்கள்' ஏராளமாய்க் கலந்த பிரயோகங்களும் பிடிப்புகளும் கொண்டதாகவே யிருக்கும். இது இவர் ஸங்கீதத்திலுள்ள விசேஷமானதோர் அம்சம் எனலாம். கேவலம் ஸ்வரக்யானத்தை மாத்திரம் அதிகமாகக் கொண்டு ஒரு ராகத்தின் உண்மை உருவத்தை வெளிக் காட்டிவிட முடியாது. ராகங்களின் சரியான ஜீவனை உணர்ந்து அழகிய வடிவமாக வெளிக் காட்டுவதில் வீருசாமி பிள்ளையின் ஸாமர்த்தியம் மிகவும் பாராட்டத் தக்கதே. இனிய நாதப் பொழிவுடன் நளினமான நடையும் கொண்டு நற்சுவையும் நல்ல பிடிப்புகளும் நிறைந்து பற்பல வர்ணங்களால் அமைத்த அழகிய சித்திரம் போல் கேட்போர் மனதிற்கு இன்ப உணர்ச்சியைக் கொடுக்கும் தன்மை கொண்டவை இவர் ராகங்கள்.

இவர் வாசிக்கும் ராகங்கள் யாவும் அழகாயிருப்பினும், 'பைரவி,' 'காம்போஜீ,' 'கீரவாணி' முதலிய கனராகங்களும், 'கேதாரகௌளை,' 'மோஹனம்' 'காபி' முதலிய ஜன்ய ராகங்களும், இவரிடம் விசேஷமாய்க் கேட்கவேண்டியவை என்பார்கள். 'ஷண்முகப்ரியா' 'ஹம்ஸாநந்தி' முதலிய அபூர்வ ராகங்களையும் மற்ற ராகங்களைப் போலவே எளிதாயும் அழகுடனும் வாசிக்கின்றுர்.

நாகஸ்வர வாத்யத்தில் லய விந்யாஸம் பெருமிதமாகக் கையாளப்படுவதுண்டு. சாதாரணமாய் ஸங்கீதச் கச்சேரிகளில் வழங்காத தாளப்ரஸ்தாரங்கள் ஸொப்படி வித்தைகளெல்லாம் நாகஸ்வரத்தைச் சேர்ந்த 'தவல்' வாத்யத்தில் காட்டப்படுவதுண்டு. சிற்சில சமயங்களில் மிதமிஞ்சியதுபோல் தென்படும். பொதுவாய் ஸங்கீதத்துக்கு இதனல் ஏற்படும் நன்மை தீமைகள் எவ்வளவு என்பதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஆனல் வீருசாமி பிள்ளையவர்கள் அதினுலுண்டான தீமைகளுக்கு இன்னும் உட்பட்டாக வில்லை. சென்ற டிஸம்பர்மாத ஸங்கீதக் கான்பரன்ஸில் மாத்திரம், ஒரு

பெரிய 'தவல்' வித்வானுடன் சேர்ந்து வாசிக்கும் ஸந்தர்ப்பத்தில் கொஞ்சம் அவ்வழிகளில் இறங்குவது போல் தோன்றியதும் அதனுல் சிற்சில சமயங்களில் அவருக்கு இயற்கையாயுள்ள ரஞ்சகம் குறைந்து காணப்பட்டதும் கேட்டோர் அறிந்து கொண்டனர். மொத்தத்தில் அவரிடம் இப்போதிருக்கும் வழியில் ஸொப்படி வித்தைகளுக்கு அதிக இடமில்லே. இனிமைக்கும் மெருகுக்கும் உள்ளடங்கியே காணப்படுவது அவரது மனோதர்மம். சில பெரிய வித்வான்களிடம் தென்படுவதுபோல் மட்டுக் கடங்காத மனோ தர்மம் வியக்கத் தகுந்த வாண வேடிக்கைகளைக் காட்டுவதும், அத்தருணம் தொட்டவிடமெல்லாம் இனிமையும், ரஞ்சகமும், மெருகும் கொண்டதோ என ஐயமெழுப்புவதுமான தன்மை படைத்ததல்ல. அவர் வாசிக்கும் பல்லவி ஸ்வரப்ரஸ்தாரங்கள் முதலியனவும் ராகபாவம் பொழிந்தே யிருக்கின்றன.

மனோதர்ம விஷயத்தில் இவருக்கும் ராஜரத்னம் பிள்ளைக்குமுள்ள வித்யாசமும் தாரதம்யமும் வெளிப்படையாகத் தெரியும். ராஜரத்தினம் பிள்ளையின் கற்பனை அபரிமிதமானது. பெரும்பாலும் வியக்கத்தக்கது. ஸங்கீத ரஸிகர்கள் ஸாதாரணமாய் எதிர் பாராத அபூர்வப் பிடிப்புகளடங்கியது. சிற்சில சமயம் அவர் கொடுக்கும் நாதம் சொல்லொணுமிருதுத்தன்மை படைத்திருக்கும். ராகங்கள் விரிந்த 'பிளான்' கொண்டிருக்கும். சொப்படி வித்தைகளையும் ஏராளமாய் காணலாம். ஆனுல் தற்காலம் தேக வலிமை குன்றியதாலோ, மற்ற எக்காரணத்தாலோ அவர் வாசிப்பில் போதுமான தொடர்ச்சியும், வலிமையும் குறைந்து, சிலவேளை மறித்து முறித்துக் காட்டுவது போல் தோன்றும்.

சாதாரணமாய் நாகஸ்வர வாத்யக்காரர்களுக்கு ராகங்களையும் பல்லவிகளையும் விஸ்தாரமாய் வாசிப்பதும் உருப்படிகளில் அதிக கவனம் செலுத்தாதிருப்பதும் சகஜம். வீருசாமிப் பிள்ளையும் ஒருவிதத்தில் இவ்வகையைச் சேர்ந்தவரே. ஆனுல் நாகஸ்வரக் காரர்களில் உருப்படிகளை சரியும், அழுத்தமாயும் வாய்ப்பாட்டுபோல் வாசிப்போரும் சிலர் உண்டு. ராஜரத்தினம் பிள்ளை, உருப்படிகளிலும் தேர்ந்தவர். அவர் குழந்தையில் வாய்ப் பாட்டுக்கே தயாரானவர் என்று தெரிகிறது.

வீருசாமிப் பிள்ளைக்கு இப்போது நடுத்தர வயது. வசீகர முகம். நல்ல தேகக்கட்டு. மிகவும் நயமான நடையுடை பாவனை. ரஸிகர்களிடம் எளிதில் அத்யந்த சிநேகிதம் கொள்வதில் அவருக்கு மிஞ்சினவரில்லை யெனலாம். வெளிப்படையாய் இன்னும் லக்ஷண சர்ச்சைகளில் புகுந்தவராகக் காணப்படவில்லை. தென்னுட்டில் பெரிய கல்யாணமோ, கோவில் உத்ஸவமோ இருந்தால் அவ்விடம் வீருசாமி பிள்ளையின் வாத்யத்தையும் கேட்கலாம். ராஜரத்னத்தைப்போலவே அவர் வாசிக்குமிடங்களில் ஸங்கீத ரஸிகர்களும், 'குட்டி' வாத்யக்காரர்களும் கூடியிருப்பார்கள். சில்லரை நாகஸ்வர வாத்தியக்காரர்களுக்கு அவர் வாசிப்பில் அதிக மோஹமுண்டு. அவர் ஓர் ஊரில் வாசித்துப் போனபின்பு அவ்விடத்துள்ள ஸாதாரண வாத்யக்காரர்கள் யாவரும் அவர் பிடிப்புகளையும் வழியையும் பின்பற்றி ஸாதகம் செய்வதும் ஸகஜம்.

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1932ம் வருஷ முடிவில் அமுலிலிருந்த பாலிஸிகளின் மொத்தத் தொகை ரூ.8,13,60,271

மொத்த ஐவேஜிகள்	....	ரூ. 1,90,00,000-க்கு மேல்
செலுத்தப்பட்ட உரிமைகள்	....	ரூ. 1,00,00,000-க்கு மேல்

பத்திரமும், திடமும் வாய்ந்த பாலிஸிகள்

விசேஷப் பத்திரத் தன்மை பெற்ற பலவகையான பாலிஸிகள்; மிகக் குறைந்த பிரீமிய விகிதங்கள்.

ஸ்திரீகளின் ஆயுட்களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன.
கூட்டு லைப் பாலிஸிகள் வெளியிடப்படுகின்றன.
கெடுத் தவறுவதற்கு சாசுவதப் பாதுகாப்பளிக்கப்படுகிறது.
வசீகரம் வாய்ந்த வசதிகள்.

இக்கம்பெனிக்கு வேலை செய்வது ஏஜண்டுகளுக்குச் சுலபமானது; அவர்களுக்கு அதிக ஊதியமும் கிடைக்கின்றது.

பூரா விவரங்களுக்கும் தயவு செய்து கீழ்க்கண்டவர்களுக் கெழுதவும்.

நெருப்பு அண்டு மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு, கீழ்க் கண்டவர்களைக் கன்ஸல்ட் செய்யுங்கள்.

நாஷனல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி,
பிராஞ்சுக் காரியதரிசி,
"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்."
362, சைனு பஜார் ரோட்,
எஸ்பிளனேட், மதராஸ்.

ஏ. வி. தியாகராஜா,
ஆர்கனைசிங் செக்ரடரி,
171, புதுத் தெரு,
மதுரை.

அன்பு

காளிதாஸன் எழுதியது

உலகமென்னும் பாலை வனத்தில்—கற்றரையும் முட்புதரும் கலந்தொளிரும் இப்பயனற்ற கானகத்தில்—எப்பக்கம் நோக்கினும் பசி, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் அரக்கர்கள் சூழ்ந்திருக்கும் இப்பேய்க் காட்டில் அன்பு என்பது காணக் கிடைக்காத ஒரு கற்பக தரு. இவ்வன்புதானும் தோன்றியவிடத்தில் 'எனக்கே உரிமை' என்னும் பேயினால் வேட்டையாடப்படாது போவதில்லை. ஆனால் உண்மை அன்பு மாத்திரம் ஒருவனுக்கு உண்டாய்விட்டால் அதைப் போன்ற வானின்பம் உலகத்தில் வேறில்லை. 'அன்பினால் இன்பங்காணும் அறிவனார் கமல பாதம்' என்று ஒரு கவி பாடுகின்றான்.

*   *   *

எங்கள் வீட்டுப் புறவடைத் தோட்டத்தில் ஓர் அழகிய ரோஜா மலர் பூத்திருக்கிறது. வீடு என்னுடையதுதான். புறவடையும் எனதே. தோட்டமும் எனக்கே சொந்தம். ரோஜா மலரோ? வேறொருவன் தொட்டால் உதைத்து விடுவேன். சரி; இவைகளெல்லாம் உண்மையே. ஆனால், என்னுடையதுதானே என்ற உரிமையுடன் அம்மலரை அன்பினால் மார்போடு இறுக அணைத்தால் அது என்னாகும்? மலர் வதங்கி, இதழ்கள் வெதும்பி உதிர்ந்துவிடும். அன்பும் அத்தகையது. அன்பின் உயிர் நாடி—ஜீவ சத்து—ஆத்ம ப்ரகாசம்—விடுதலை. கட்டுப் பாட்டுக்குள் அன்பு அடங்காது. 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்' என்று நமது தமிழ் மறை முனிவரும் கூறுகின்றார்.

*   *   *

அன்பிற்குப் பற்றுக் கோலொன்று வேண்டும். அப்பற்று தீயதாயின் அன்பு அழிந்துவிடும்; பொய்யாகிவிடும். உலகம் பெருஞ்சேறு. அதில் முன்காலை எடுக்கப் பின்காலை வைத்துத்தானாகவேண்டும். இவ்வளவும் செய்தும் சேற்றைவிட்டு வெளியே வர முடியாது. கடவுளிடத்தும், கடவுள் மக்களிடத்தும் கொள்ளும் அன்பே அழியா அன்பு.

*   *   *

உலகத்தில் பல பித்துக்கள் உண்டு. பணப் பித்து, காமப்பித்து, உடைப் பித்து, குடிப்பித்து, பொடிப் பித்து என்று எழுதிக்கொண்டே போகலாம். இப்பித்துக்கள் யாவினும் உயர்ந்தது அன்புப் பித்து. அன்பு சொந்தக்காரரிடம் உரிமையால் அழிகின்றது. நேசர்களிடம் பொறாமையால் அழிகின்றது. காதலர்களிடையே முரண்பட்டால் அழிகின்றது. குழந்தைகளிடம் சார்பின்மையால் அழிகின்றது. ஆனால் அது தாயிடமும், தனிப்பெரும் தெய்வத்திடமும், அத்தெய்வ அன்பர்களிடமும், முற்றி ஒன்றுபட்ட காதலியிடமும் அழிவதில்லை.

*   *   *

'அன்பே சிவம்' என்பது ஒரு பெருமொழி. உலகம் என்பது யாது? சூர்ய சந்திர நட்சத்திராதிகள் யாவை. அவை கடவுளின் திருமேனி. அவை அன்பின் வடிவங்கள். பூமி சந்திரனை இழுக்கிறது. சூரியன் பூமியை இழுக்கிறான். இந்த இழுக்கும் சக்திதான் அன்பு. காந்தம் இரும்பை இழுப்பது அன்பு. மனம் மனதை ஈர்ப்பது அன்பு. கண்கள் கண்களைக் கவ்வுவது அன்பு. 'வெறுப்பென்பது தலைகீழான அன்பு' என்று கார்லைல் கூறுகிறான். 'பயம் அமுக்கப்பட்ட அன்பு' என்று ராம தீர்த்தன் மொழிகின்றான்.

*   *   *

'உடலை நேசியாதே, உயிரை நேசி' என்று விக்டர் ஹ்யூகோ கூறியது முற்றும் சரி. முன்னது காமம்; பின்னது காதல். முன்னது அநித்யம்; பின்னது நித்யம். முன்னது கள்; பின்னது அமுதம். முதலாவது வெறி; இரண்டாவது அமைதி. முற்பாதி காட்டாறு; பிற்பாதி ஜீவநதி. ஆனால் இரண்டும் அன்புதான். நாம் முன்னதை நீக்கிப் பின்னதைக் கைக் கொள்வோமாக.

*   *   *

அன்பைப் பற்றிப் பாடாத கவியில்லை. அதுதான் கடவுளென்று போற்றாத ஞானியில்லை. இலக்கியத்திலெல்லாம்—ஏன், நம் நாட்டில் இலக்கணத்திற்கூட, அன்பு ததும்புகின்றது. நம் முன்னோர்கள் எப்பொருளிலும் அன்பைக் கண்டார்கள். நாமோ—?

*   *   *

'ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' இவ்வாக்யம் நம் உள்ளத்திற் பதியட்டும். நம் ரத்தமாக ஓடட்டும். உணர்வாக மிளிரட்டும். நம் உடம்பே—உருவே—அவ்வாக்கியமாக மாறிவிட வேண்டும். இதுவே நான் கடவுளுக்கு அனுப்பும் விண்ணப்பம்.

மதிப்புரை

டால்ஸ்டாய்

அலது

மகாத்மா காந்தியின் குரு

காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் ஞானிகள் தோரு, டால்ஸ்டாய், பகவான் புத்தன் முதலிய சீரியர்களின் உபதேசங்களின் கோவை என்பதை அறிஞர் அறிவர். அந்த உலகப் பெரியார்களில் ஒருவரான டால்ஸ்டாய் ஞானியின் சரிதத்தையும், அவரது உபதேசச் சொற்கள் சிலவற்றையும் சிறு புத்தக ரூபமாகத் தமிழில் ஆக்கூர் அனந்தாச்சாரியார் எழுதியிருக்கின்றார். ஆக்கூர் அனந்தாச்சாரியார் ஒரு காந்திப் பித்தர்; தேசபக்தர். தமது ஒழிவு நேரங்களை வீணாக்காது இப்புத்தகம் போன்ற தேச உபகாரமான காரியங்களில் அனந்தாச்சாரியார் ஈடுபடுவது போற்றத் தக்க செய்கையாகும்.

எளிய நடையில் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. பதிப்பும் சிறப்பாகவே யுளது. அந்த ஞானியின் வாழ்க்கையின் ரஸமான பாகங்களெல்லாம் இப்புத்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பல புத்தகங்களை மேலும் மேலும் எழுத ஆக்கூர் அனந்தாச்சாரியாருக்கு சிரத்தையும், அவரது புத்தகங்களுக்குத் தமிழரின் ஆதரிப்பும் ஏற்படவேண்டுமென்பது நமது அவா.—"ஆயில்யம்".

இப்புத்தகத்தின் விலை அணா 3 தான்.

கிடைக்குமிடம் :—

சுதந்திரச் சங்கு காரியாலயம்,
கிட்டப்பா மலர் பிரசுராலயம்.
திருவல்லிக்கேணி,

ஆச்சானுக்குப் பீச்சான்

குஞ்சு

நான், குண்டு ராவ், சுப்பிணி, குப்பண்ணயங்கார் — நால்வரும் கூடி விட்டால் போதும், ரண களந்தான். எங்கள் பேச்சுக்கு முற்றுப்புள்ளி கிடையாது. எப்போது பாருமே, ஓயாத பேச்சு, ஒழியாத வாய்ப் பந்தல், அழியாத பிரசங்கம்.

இருவர் பேசுகிறார்கள் ஒருவர் பேசுவது மற்றவர்க்கு விளங்காது ஆனால் வரம்பின்றிப் பேச்சு மாத்திரம் வளர்ந்து கொண்டே போகும். இப்படிப் பேசப்படுவதுதான் வேதாந்தம் என்று சொல்வர். ஆனால் வேதாந்தத்தில் கூட ஒருவர் வார்த்தைக்கும் மற்றொருவர் வார்த்தைக்கும் ஏதோ சம்பந்த மிருப்பதாகப் பாவனையாவது உண்டு. எங்களுக்குள் அதுவும் கிடையாது. சுண்டைக்காய் வற்றல் பேச்சினிடையே சுயராஜ்யம் நுழைந்து கொள்ளும். சுயராஜ்யம் சுண்டைக்காயில் முடிந்து விடும்.

இடையிடையே வாதம், விவாதம் பிரதிவாதம், பிடிவாதம் முதலிய தினுசுகள் காரமாய் நடைபெறும்.

குண்டு ராவ் எங்கள் எல்லோரிலும் பெரியவர், வயதில் மட்டுமல்ல; உருவத்திலும். ஆகவே எங்களது தெருத்திண்ணை 'கான்பரன்ஸு'க்கு அவர்தான் நிரந்தர அக்ராசனாதிபதி நான் கொஞ்சம் ஒல்லி. எனினும் ஒட்டை வாயன். சுப்பிணி கிடு சிடு, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும், அதோடு மூக்குக் கொஞ்சம் கோணல். அய்யங்கார் சுக புருஷர். அறுபது ஆமவடை யென்றாலும் ஒரு கை பார்ப்பார், தள தளத்த கொழ கொழ சரீரம். குண்டு ராவ் குள்ள மென்றாலும் கரணை கரணையாய்க் கட்டு மஸ்தான அங்கங்கள். எங்களைப் பற்றிய வர்ணனை போதுமா? இன்னும் ஒரே வார்த்தைக் பொதுவாக நால்வருமே சாப்பாட்டு ராமர்கள் தான்.

சுப்பிணி ஆரம்பிப்பான்.

"ஏது. ஸ்வாமிகளுக்கு இன்று தண்ட பிண்டம் போலிருக்கே?"

அய்யங்கார் சொல்வார்.

"அதேன் கேக்கரே. இன்னைக்கு ரொம்ப குஷி. மகராஜன் ஜமாய்ச்சுட்டான். அடடா! அந்தப் பால் பாயாசம் இருக்கே, அது ஒண்ணுக்கே குடுக்கணம். தேவாம்ருதமா யிருந்தது. என்னைய்யா, பச்சடியிலே அஞ்சு வகையா....?" என்று லிஸ்ட்டு ஒப்பிக்க ஆரம்பித்து விடுவார்.

குண்டு ராவ்—"ஏன், ஸ்வாமி ஸ்வ ராஜ்யம் வந்தால் இவ்வளவு நல்ல சாப்பாடு கிடைக்குமா?"

அய்யங்கார்—சுயராஜ்யமாவது, சுண்டைக்காயாவது. சாப்பாட்டுக்கிருந்தா எல்லாம் சுயராஜ்யம்தான்.

சுப்பிணி—நேற்று மகாத்மா பேசியிருக்காரே தெரியுமா?

குண்டு ராவ்—என்னதான் பேசினாலும் என்னடா பயன், ராஜாங்கத்தை விரோதிச்சுண்டா. அவ்வளவு தான். இவர்களால் என்ன சாதிச்சுட முடியும்,

சுப்பிணி—ராஜாங்கத்தை விரோதிச்சுப் பிரஹலாதன் சாதிக்கலேயோ?

அய்யங்கார்—எங்கெக் செங்கே! பிரஹலாதாழ்வா னெங்கே? இந்தப் பித்துக் கொள்ளி காந்தி எங்கே?

சுப்பிணி—அது கிடக்கிறது. ஹரிஜனைப் பற்றி நீங்க (இந்த நீங்க யாரென்பது அநேகமாய்த் தெரிவதில்லை) என்ன நினைக்கிறீங்க?

குண்டு ராவ்—ஹரிஜனாவது கரிஜனாவது. ஹரிஜனெல்லாம் நம்ம மாதிரி சாப்பட ஆரம்பிச்சுட்டா அப்புறம் நம்ம பாடு லாட்ரிதான்.

அய்யங்கார்—நேற்று அந்தக் கோமுட்டிப் பய பாருங்கோ. பூணூலைக் காட்டி நானும் பாப்பாந்தான் சாமி இங்கிறான். ஹரிஜனும் அப்படித்தானே ஆயிடும்.

குண்டு ராவ்—யாரு நம்ம அப்பாவு செட்டியார்தானே. அவன் எப்படியோ எனக்குத் தெரியாது. ஆனா, அவன் சம்சாரம் ரொம்ப நல்ல மாதிரி. தங்கமான மனுஷி.

நான்—வாஸ்தவம். நேற்று அவன் வீட்டிலே ஸ்ரார்த்தம். நான்தான் போயிருந்தேன். என்ன விதரணை போங்க. அரிசி, பருப்பு, நெய்யி, வெல்லம், காய்கறி சமேதம் அஞ்சு ரூபா தட்சணை வைச்சிக் கொடுத்தானா.

அய்யங்கார்—அதே அடுத்தாத்து ஸ்ரீரங்கஞ் செட்டி சம்சாரம் இருக்காளே. மகா கருமி. எச்சக் கையிலே காக்கா ஒட்ட மாட்டா. அவன் பாவம் நல்ல மனுஷன். தாயளமான குணம்,

சுப்பிணி—ஆமாம். ஜாதகம் தீதகம் பார்த்துத்தானே கல்யாணம் பண்றா. இந்த மாதிரி அதிலே எட்டிக்குப் போட்டி ஏற்படுவானேன்?

குண்டு ராவ்—அது அவனவன் தலை விதி.

சுப்பிணி—தலை விதியாவது, மண்ணாங்கட்டியாவது. விதியென்று சும்மாயிருந்து பாரும். விதி உமக்குச் சாப்பாடு போடுமா?

அய்யங்கார்—விதி பெருசா? மதி பெருசா?

குண்டு ராவ்—விதியை வெல்ல முடியுமா?

சுப்பிணி—மதியை விதி வெல்லுமா?

நான்—இரண்டும் பெருசுதான். இரண்டும் ஒன்றையொன்று வெல்லக் கூடும். விதி மதியை வெல்லுவது சாதாரணம். மதி விதியை வெல்லுவது அபூர்வம்.

குண்டு ராவ்—எல்லாம் தெய்வத்தின் கையிலே இருக்கிறது.

சுப்பிணி—அவனன்றி ஓரணுவு மசையாது.

அய்யங்கார்—சர்வம் விஷ்ணு மயம் ஜகது.

இத்யாதி கணக்கு வழக்கில்லாமல் போகும். சோறு, சுயராஜ்யம், ஹரிஜன், விதி, கடவுள். திரும்பவும் இதே தினுசு. இவைகளில் சம்பந்தா சம்பந்தம் கண்டுபிடிக்க என்னால் முடியவில்லை. உங்களால் முடியுமானால் ஒரு கை பாருங்கள். நாங்கள் ஏதோ 'ஆச்சானுக்குப் பீச்சான் மதனிக் கொடப் பொறந்தான்' வகையில் பேசிக்கொண்டு போவோம். மொட்டத் தலைக்கும் முழங் காலுக்கும் முடிபோடும் பேர்வழிகள் என்று எங்களை நினைத்து விடாதீர்கள். முடிபோடும் வழக்கமே இங்கில்லை. எங்கள் பேச்சிடையே மொட்டத் தலை முழங்காலாகவே மாறிப் போய்விடும்.

* * *

இவ்வளவும் கேட்டுக் கொண்டிருந்த எதிர் வீட்டு ராமசுப்பன் 'அந்தோ, நம் தமிழ் நாட்டில் இத்தகைய தெருத் திண்ணைப் பிரசங்கங்கள் என்று ஒழியுமோ; அன்றுதான் விமோசனம் ஏற்படும்' என்று அங்கலாய்த்தானாம்.

எதற்கு விமோசனம் ஏற்பட்டாலும் எங்கள் அரட்டைக்கு மட்டும் விமோசனம் கிடையாது.

விவசாயம்

(காலஞ்சென்ற ஸ்ரீயுத வ. வே. ஸுப்ரஹ்மணிய அய்யர் எழுதியது)

மனிதர் செல்வம் செல்வம் என்று பறக்கிறார்கள். ஆனால் செல்வத்தைத் தேடும் முறை தெரியாமல், உத்தியோகம் என்று புனைப் பெயரால் அழைக்கப்படும் அடிமைத் தொழிலிலும், கண்டிராக்ட் என்று சொல்லுகிற ஒப்பந்த வேலையிலும், ஸ்பெகுலேஷன் என்று சொல்லப்படுகிற சூது விளையாட்டிலும், கள், சாராயம் முதலிய லாகிரிகளின் விற்பனையிலுந்தான் பெரும்பாலும் இறங்கிச் செல்வத்தைச் சேர்க்க முயலுகிறார்கள். இத்தகைய காரியங்களில் இறங்குபவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்கு வயிற்றைக் கழுவப் போதிய அளவுகூட வருமானம் கிடைப்பதில்லை. அநேகர் பெரு நஷ்டம் அடைந்து கெட்டுப்போய் விடுகிறார்கள். மிக மிகச் சிலரே தாம் இவைகள் மூலமாகச் செல்வவந்தர்களாகிறார்கள்.

ஆனால் பிடிவாதத்தோடு, மனம் வைத்துச் சரியான வழியில் முயற்சி செய்கிற அனைவருக்கும் பாரபட்சமில்லாமல் அமோகமாய்ச் செல்வம் அளிக்கப் பூமிதேவி காத்துக்கொண்டிருக்கிறாள். அவள் ஒருத்திக்குத் தான் ஜாதி வித்தியாசம், சமய வித்தியாசம், தாட்சண்யம் முதலியவை இல்லை. உழைத்த மட்டிற்குப் பயன் தருகிறாள். சாமானியமாக உழைத்தால் சாமானியமான பயனைத் தருகிறாள். வழி தெரிந்து பெருமுயற்சி செய்தால் 'மடிதற்றுத் தான் முந்து'ற்று எதிர்பார்க்க முடியாத அளவுக்குக்கூடப் பயனைத் தந்துவிடுகிறாள். ஆனால் அறிவோடு, பொறுமையோடு, பணிவோடு செய்யவேண்டும். சளைக்காமல் ஆராய்ச்சிகள் செய்து வரவேண்டும். செய்த ஆராய்ச்சி முறைகளை நினைவிலும் குறிப்பிலும் வைத்துக்கொண்டு, வந்த பயனுக்கேற்றபடி அவற்றை மாற்றியோ, திருத்தியோ அமைத்துக் கொண்டு, புதிய ஆராய்ச்சிகள் செய்து புதிய முறைகளைக் கண்டுபிடித்து அனுஷ்டிக்க வேண்டும். ஆராய்ச்சி செய்வதில் அலம் பிரக்கினை--அதாவது போதும் என்கிற எண்ணம்—இருக்கவே கூடாது.

இந்த வழிகளில் வேலை செய்து ஐரோப்பியரும் அரிய பயனை அடைந்து வருகிறார்கள். பெல்ஜியம் நாட்டில் பத்து வருஷத்து விளைவைச் சராசரி பார்த்ததில் ஓர் ஏகராவில் ஒரு போகத்துக்கு 550 பக்கா கோதுமை விளைந்ததாம். நன்றாகப் பண்படுத்தின பூமியில் 1134 பக்கா வந்ததாம். அந்த நாட்டில் ஒரு சதுர மைலுக்கு 589 ஜனங்கள் இருக்கிறார்கள். 40 வருஷங்களுக்கு முன் அவர்களில் 490 ஜனங்களின் ஆகாரம் அவர்களுடைய குறுகிய நாட்டிலேயே உண்டாக்கப்பட்ட தென்பதிலிருந்து அவர்களுடைய வேளாண்மைத் திறத்தை ஒருவாறு நிச்சயம் செய்து கொள்ளலாம். அமெரிக்காவில் நன்றாக வேலை செய்த பத்து வேளாளர் ஓர் ஏகராவில் 1730 படி முதல் 2300 படி வரையில் மக்காச்சோளம் அறுத்தார்கள். சில ஏகராக்களில் 31 டன் அதாவது 69,440 ராத்தல் உருளைக் கிழங்கு எடுத்திருக்கிறார்கள்! தென்மார்க்கில் ஏகராவிற்கு 800 பக்கா கோதுமை விளைகிறது. இந்நாட்டில் 28 லட்சம் ஜனங்கள் தான் இருக்கிறார்கள். சாகுபடிக்கு யோக்கியமாக 70 லட்சம் ஏகர்தான் இருக்கிறது. இந்தப் பூமியிலிருந்து இவர்கள் நாலுகோடி பவுன் கிரயமுள்ள உணவுப் பதார்த்தம் உண்டுபண்ணுகிறார்கள். 145 லட்சம் பவுன் விலையுள்ள உணவுப் பொருள்களை அவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள்!

ஆனால் பிரஞ்சுத் தோட்டக்காரர்களே பழ மரங்கள் வைத்தும், கறிகாய்ப் பதார்த்தங்கள் பயிர் செய்தும் மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமான லாபம் சம்பாதிக்கிறார்கள். ஓர் உதாரணம் எடுத்துக் காட்டுவோம். போன்ஸ் என்ற ஒரு தோட்டக்காரன் இரண்டேமுக்கால் ஏக்கரா வைத்திருந்தான். தண்ணீர் இறைப்பதற்கு ஓர் இயந்திரம் உள்பட அவனுடைய நிலத்தின் கிரயமும் செலவும் சேர்த்து 1136 பவுன் அல்லது 17,000 ரூபாய் ஆயிற்று. தோட்டத்தில் போன்ஸைச் சேர்த்து எட்டுப் பேர் வேலை செய்தார்கள். கறிகாய்களைப் பாரிஸ் சந்தைக்குக் கொண்டு போவதற்குப் போன்ஸ் ஒரு குதிரையும் வைத்திருந்தான். பாரிஸிலிருந்து திரும்பும் போது அவனும் ஆட்களும் எரு அள்ளி வருவார்கள்.

ஒரு வருஷத்தில் இவ்வாறு 1500 ரூபாய் பெறும்படியான எரு வாரி வருவார்கள். குத்தகைக்கும் வரிக்குமாக வருஷம் 1500 ரூபாய் செலவாகும். இந்த இரண்டேமுக்கால் ஏக்கரா நிலத்தில் வரும்படியோ சொல்லி முடியாது. அவற்றுள் 'முக்கியமானவை, 20,000 ராத்தல் கரோத்து (பறங்கிக்காய் போலத் தித்திக்கும் ஒரு காய்) 20,000 ராத்தல் வெங்காயம், முள்ளங்கி முதலியன. 6000 முட்டைக்கோஸ், 3000 காலிப்ளவர், 5000 கூடை தக்காளி, 6000 முதல் தரப் பழங்கள், 1,54,000 ஸலாது, எல்லாம் சேர்த்துப் பார்த்ததில் இரண்டரை லட்சம் ராத்தல் சாகங்கள் அகப்பட்டன! இவன் ஒருவன் தான் இவ்வாறு வேலை செய்து வந்தான் என்று நினைக்க வேண்டாம். பாரிஸ் நகரத்தைச் சுற்றி 5000 பேர் 2,125 ஏக்கராக்கள் பயிர் செய்து பாரிஸிலுள்ள 20 லட்சம் ஜனங்களுக்கு வேண்டிய சாகங்கள் உற்பத்தி செய்வது மல்லாமல் லண்டனுக்குக் கூடச் சாகங்கள் அனுப்பி வருகிறார்கள்.

இன்னும் ஓர் உதாரணம் மாத்திரம் காட்டுவோம். கொன்ஸே என்று இங்கிலாந்துக்குச் சொந்தமான ஒரு பிரெஞ்சுத் தீவு இருக்கிறது. அதிலுள்ள பாறைகள், மலைச் சிகரங்கள் உட்பட அதன் விஸ்தீரணம் 16,000 ஏக்கராவுக்கு மேலில்லை. அவற்றுள் 9884 ஏக்கராக்கள் தாம் பயிர் செய்ய யோக்கியமானவையாம். ஆனால் அத்தீவிலிருந்து வருஷா வருஷம் ஏற்றுமதியாகும் சாகங்களைக் கணக்கிட்டு எடுத்துச் சொன்னால் பொய்போல இருக்கும். இருப்பினும் ஒரு மட்டுக்குக் குறிப்பிடுவோம்.

முப்பது வருஷங்களுக்கு முன் 11¼ லட்சம் ராத்தல் கொடிமுந்திரிப் பழம், 22 லட்சம் ராத்தல் தக்காளிப் பழம், 20,000 பவுன் பெறுமானமுள்ள உருளைக்கிழங்கு, 9000 பவுன் விலையுள்ள முள்ளங்கி முதலியன; 3000 பவுனுக்குப் புஷ்பங்கள்; 200 பவுன் விலையுள்ள நாய்க்குடை ஆக ஒரு லட்சம் பவுனுக்கு இத்திவார் லண்டனுக்குச் சாகங்கள் அனுப்பி வந்தார்கள். ஆனால் சகம் 1832-ல் அதாவது 14 வருஷங்களுக்கு முன் அதன் 5 லட்சம் பவுன் விலையுள்ள உருளைக்கிழங்கு உட்பட 11 லட்சம் பவுனுக்குச் சாகங்கள் ஏற்றுமதி செய்தார்களாம்! இன்றைக்கு இவ்வியாபாரம் இன்னும் அதிகமாயிருக்கும் என்பதில் தடையே இல்லை. இதனோடு இவர்களுடைய நிலங்களில் 7260 மாடுகளுக்கும் 900 ஆடுகளுக்கும், 1480 குதிரைகளுக்கும் தீவனம் கிடைத்ததாம்!

இத்தனைக்கும் நாம் மேலே பிரஸ்தாபித்த பூமிகள் இயற்கை வளம் நிரம்பியவை அல்ல. அநேகம் மிகச் சாமானிய பூமிகள். தேசமும் குளிர்ந்த தேசம். ஆனால் பிரகிருதி மறுத்திருக்கிற வளப்பத்தை மனிதன் பூமிக்கு உண்டாக்கி விட்டான். நாம் பேசிய பிரெஞ்சு வேளாளர் பூமிக்கு அடியில் குழாய்கள் போட்டு அவைகளை வெந்நீரால் நிரப்பிப் பூமியை உஷ்ணப்படுத்துகிறார்கள். வைத்யுத* சக்தியைப் பிரயோகித்துப் பூமியை மேலும் மேலும் சுரக்கச் செய்கிறார்கள். பூமிக்கு உரம் சேர்ப்பதற்கு அவர்கள் பின் வாங்குகிறதே யில்லை. குத்தகை ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் போது, தான் போட்ட உரத்தினால் உயர்ந்த மண்ணையும் வாரிக்கொண்டு போவேன் என்று நிபந்தனை கண்டே தான் குத்தகைக்காரன் நிலக்காரனுக்குக் குத்தகைச் சீட்டு எழுதித் தருகிறான். அவ்வளவு தூரத்துக்கு அவர்கள் பூமியைப் பண்படுத்துவதில் கருத்தைச் செலுத்துகிறார்கள்.

நம் நாட்டு பூமி இவர்களுடைய பூமிக்கு வளப்பத்தில் எள்ளளவும் தாழ்ந்ததில்லை. தாமிரபர்ணி, காவேரி, கிருஷ்ணா, கோதாவரி, கங்கை, ஸிந்து முதலிய திவ்விய நதிகள் பாய்கிற பிரதேசங்கள் நிலவளம் நீர் வளங்களில் எந்த நாட்டிற்கு இளைத்திருக்க முடியும்? ஆனால் இவை மாத்திரம் போதுமானால் நாம் பயிர்த்தொழிலில் ஐரோப்பியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இவ்வளவு பின்னே இருக்க மாட்டோம். ஆகவே செல்வச் செருக்குக்கு நிலவளமும் நீர்வளமும் மாத்திரம் போதா. குடிவளந்தான் முக்கியமானது. 'வீரப்ஹோக்யா வஸுந்தரா' என்பது பழமொழி. ஆள்வினை உள்ளவருக்குத்தான் நிலம் பயன் தரும். ஆகையால் இனியாவது நாம் மற்ற நாட்டவரைப்போல விவசாயத்தை அறிவாளிகள் இறங்கிச் செய்யவேண்டிய தொழிலாகப் பாவித்து நடத்தல் வேண்டும். உத்தியோகம் உத்தியோகம் என்று பறந்துகொண்டு உள்ள நிலங்களை விற்றும் கொதுவை வைத்தும் பணம் வாங்கி ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் படித்து, பிழைக்கும் வழி தெரியாமல் அலைகிறவர்கள், மேல் நாட்டவர் முறையைத் தெரிந்து கொள்வதற்கு மாத்திரம் போதிய அளவுக்கு ஆங்கிலம் படித்துக்கொண்டு, தங்கள் நிலங்களை விற்காமல் வைத்துக்கொண்டு அதைச் சரியானபடி கிருஷி செய்து வந்திருந்தால் எவ்வளவு சுகமாக வாழ்ந்திருப்பார்கள்? நாட்டின் செல்வத்தை எவ்வாறு பெருக்கி யிருப்பார்கள்? ஆனால் போனதை நினைத்து வருந்துவதில் பயனில்லை. இறந்த காலத் தவறுகளை வருங்கால வளர்ச்சிக்குச் சோபானங்களாக வைத்துக் கொள்ளுவதே அறிவாளிகளின் இலக்கணம். ஆகையால் நாட்டின் செல்வத்தை வளர்க்க ஆசை கொண்டவர்கள், நாம் மேலே எடுத்துக் காட்டிய மேனாட்டவர் முயற்சியை ஒரு தூண்டுகோலாக வைத்துக் கொண்டு ரஸாயன ஆராய்ச்சிகளில் இறங்கி விவசாயத்தையும், கொடிக்கால் தொழிலையும் மேற்கொள்வாராக.

* வைத்யுதம்=மின்சாரம்.

Have your Majestic
FIGURE
A
R. DASEN STUDIO.
The Best
ELECTRIC PHOTO ARTISTS
AND MOST UP TO DATE STYLE & FINISH
No. 55 RATTAN BAZAAR ROAD MADRAS
STUDIO HOURS 8 A.M. to 8 P.M.

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	....	0	0	6
ஹரிஜனத் தொண்டு	....	0	0	6
ஹரிஜனப் பணி	....	0	0	6
ஹரிஜன விமோசனம்	....	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

புட்டி விலை அணா 12. மேற் செலவு வேறு.

ஸாக்ரடீஸ்

கொள்கைக்காக உயிர் துறந்த கிரேக்க மகான்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.)

[கொள்கைக்காக உயிர் துறந்த மகான்களில், புராதனமான ஒருவர் கிரேக்க வேதாந்தியான ஸாக்ரடீஸ். மனங்கலங்காது அமைதியாய் விஷத்தைப் பருகி உயிர் துறந்தார் அவர். அவருடைய சரித்திரச் சுருக்கம், ராஜாஜியின் பிரசங்களடங்கிய Chats Behind Bars என்ற ஆங்கில நூலில் காணப்படுகின்றது. அதன் மொழிபெயர்ப்பைக் கீழே தந்திருக்கிறோம். —ப.ர்.]

ஸாக்ரடீஸ், கிறிஸ்துவுக்கும் முன்னே வாழ்ந்தவர். புத்தரும் கிறிஸ்துவும் ஸ்ரீ கிருஷ்ணனும் போதித்த உண்மைகளையே அவரும் போதித்தார். ஸாக்ரடீஸ் ஓர் ஏழை மனிதர். அவர் கவலைகொண்ட விஷயங்களில், அவர் மனைவிக்குக் கவலை கிடையாது. ஸாக்ரடீஸ் தமது நாட்டு ஜனங்களுக்கு உதவி செய்ய விரும்பினார்; அவருடைய மனைவிக்குத் தங்கள் சொந்தக் குடும்பத்தைப்பற்றித்தான் கவலை. ஆகையால், கணவனும் மனைவியும் சச்சரவிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஸாக்ரடீஸ் மிகப் பொறுமைசாலி. தம்முடைய இயல்பை நன்றாக விளங்கிக் கொள்ளாத மனிதரிடையே அவர் வசித்தார். அவர் ஓர் ஆபத்தான பேர்வழி யென்று அவர்கள் நினைத்தார்கள். ஜனங்களின் அமைதியை அவர் குலைப்பதாக அவர்கள் எண்ணிவிட்டார்கள். கிருஸ்துவையும் அவர் காலத்து மனிதர்கள் இவ்வாறுதானே வெறுத்தார்கள். ஆகையால், இவ்விரு பெரியோரும் அவரவர் நாட்டுச் சட்டத்தின்படி மரண தண்டனை விதித்துக் கொலை செய்யப்பட்டார்கள். சட்ட பூர்வமாக விசாரணை நடத்தியே மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் அந்நாடுகளில் தூக்கிலிடும் வழக்கம் கிடையாது. ஸாக்ரடீஸின் காலத்தில் அவருடைய ஏதென்ஸ் நகரத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டவனுக்கு விஷத்தைக் கொடுத்துக் குடிக்கச் சொல்லுவது வழக்கமா யிருந்தது. ஸாக்ரடீஸின் மரண தண்டனையும் இவ்வாறுதான் நிறைவேற்றப்பட்டது.

கொள்கைக்காக உயிரைக் கொடுத்த பெரியாரில் ஸாக்ரடீஸும் ஒருவர். அவர் ஒரு கிரேக்க மகான். அவரது அழகு பொதிந்த வாழ்க்கையைப்பற்றி நம் நாட்டு ஆண், பெண், குழந்தைகள் ஆகிய அனைவரும் தெரிந்துகொள்ளுதல் நலமாகும். அவர் கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் என்று சொல்லப்பட்ட நகரத்தில் 2,400 வருஷங்களுக்குமுன் வாழ்ந்தார். இது அசோகர் காலத்துக்கு முன்னும் புத்தர் காலத்துக்குப் பின்னுமாகும். அவருடைய தாய் பிறர் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாதி வேலை பார்த்தாள். தந்தை பதுமைகள் செய்யும் சிற்பத் தொழில் புரிந்துவந்தார். நமது தேசத்தில் தச்சு வேலை எவ்வளவு சர்வ சாதாரணமா யிருக்கிறதோ இதேபோல், அக்காலத்தில் கிரேக்க நாட்டில் சிற்பத்தொழிலும் சர்வசாதாரணமாய் வழங்கி வந்தது. தத்துவ ஆராய்ச்சியான விஷயங்களைக் குறித்து ஜனங்களிடம் சம்பாஷிப்பதிலேயே ஸாக்ரடீஸ் தமது காலத்தை யெல்லாம் கழித்தார். தமது வீட்டுக் காரியங்களில் அவர் சிரத்தை செலுத்துவதே யில்லை. தாமே எந்த நூலையும் அவர் எழுதவில்லை. அவர் சம்பாஷணைகளை அவருடைய சிஷ்யர்கள் எழுதினார்கள்.

ஸாக்ரடீஸின் காலத்தில் ஏதென்ஸ் நகரம் ஜனநாயக முடையதா யிருந்தது. இன்று லண்டன் எவ்வாறு பிரசித்தமா யிருக்கிறதோ அவ்வாறே அந்த நகரம் அப்பொழுது பிரசித்தமா யிருந்தது. விக்கிரமாதித்தியன் காலத்து உஜ்ஜயினியிலும் சந்திர குப்தர் காலத்துப் பாடலிபுரத்திலும் இருந்தவர்களைப் போலவே, ஏதென்ஸ் நகரில் அக்காலத்தில் அரசியல் வாதிகள், வேதாந்திகள், சிற்பிகள், புலவர்கள், நாடகாசிரியர் ஆகியவர் நிறைந்திருந்தார்கள். அதன் ஜனநாயக அரசாங்கத்தில், நகரத்தின் சுதந்திரப் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் பங்கிருந்தது. எல்லாரும் சேர்ந்துக் கூடித் தங்கள் "மாஜிஸ்திரேட்"டுகளைத் தேர்ந்தெடுப்பார்கள். எவராவது ஒரு கூட்டத்துக்கு வராவிட்டால் அவருக்குத் தண்டனை கிடைக்கும். ஒவ்வொரு பிரஜையும் கூட்டத்துக்கு வருவது கட்டாயமாகும். நகரத்தின் நிர்வாகத்தில் ஜனங்கள் நேரே பங்கெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதில்லை. ஒரு குற்றத்திற்காக ஒரு மனிதனை விசாரிப்பதாயிருந்தாலும் நகரப் பிரஜைகள் யாவரும் கூடி உட்கார்ந்து விடுவார்கள். அதுதான் நியாயமன்றமாகும். சிலரை ஜூரியாகத் தேர்ந்தெடுப்பார்கள். யார் வேண்டுமானாலும் ஜூரராக வரலாம்.

ஸாக்ரடீஸ் சில காலம் சேனையில் சேர்ந்து சேவை செய்தார். ஒரு சமயம் யுத்தகளம் ஒன்றில் ஏதென்ஸ் நகரத்தின் ஓர் பெரியரான ஆல்ஸிபியாடீஸ் என்பவரை, ஸாக்ரடீஸ் காப்பாற்றினார். வேறோர் யுத்தத்தில் ஏதென்ஸ் நகரத்தின் சேனை புறமுதுகிட்டோடியது. அப்பொழுது அஞ்சாது முன்னின்ற தீரர் சிலருள் ஸாக்ரடீஸும் ஒருவர். தத்துவ ஆராய்ச்சிக்காரர்களுக்குத் தேகத்தால் கஷ்டத்தைச் சகித்துக் கொள்ளும் தைரியம் கிடையாது என்று நினைப்பது வழக்கமாயிருக்கிறது. ஆனால், இது உண்மையல்ல. நிர்மலமான நல்லொழுக்கத்தோடுகூடத் துணிவும் தீரமும் உடைய தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். ஸாக்ரடீஸும் அவர்களுள் ஒருவர்.

ஸாக்ரடீஸின் காலத்தில் கிரேக்க நாட்டில் ஓர் புதிய இயக்கம் தோன்றியது. கிரேக்கர்களின் புராதன மதத்தில் அவநம்பிக்கை உண்டாகத் துவங்கியது. தாங்கள் வணங்கிவந்த தெய்வங்கள் உண்மை யானவையா என்று ஜனங்கள் சந்தேகங் கொள்ளத் துவங்கினார்கள். ஸயின்ஸின் உண்மைகளையும் தத்துவ சாஸ்திர உண்மைகளையும் பல மனிதர் ஆராயத் துவங்கினார்கள். அக்காலத்தில், இத்தகைய

ஆராய்ச்சியும் ஐயமும் ஜன சமூகத்தில் குழப்பத்தை உண்டாக்கிவிடுமென்று நினைத்த சில ஜனங்கள் இந்தச் சந்தேகங்களை அடக்கிவிட முயற்சித்தார்கள். அவ்வாறு அடக்க முயற்சித்தவர்களுள், பெரிய நாடகாசிரியரான அரிஸ்டபோனிஸ் என்பவரும் ஒருவர். தாம் இயற்றிய நாடகம் ஒன்றில், அவர் ஸாக்ரடீஸைக் கேலி செய்திருக்கிறார். ஜனங்களிலும் ஒரு முக்கிய கோஷ்டியினர் ஸாக்ரடீஸைப் பகைக்கலானார்கள்.

ஸாக்ரடீஸ் விகாரமான தோற்றமுடையவர். அவர் முகம் அழகானதல்ல. அவர் கண்கள் பிதுங்கிக் கொண்டிருக்கும்; மூக்கு மிகப் பெரியது. எழ்மையான உடையை அணிந்திருப்பார். அவர் தெருவில் திரிந்து கொண்டே யிருப்பார். எதிர்ப்படும் ஒவ்வொருவரிடமும் பேச ஆரம்பித்து விடுவார். மொத்தத்தில் ஒரு பைத்தியக்காரன் என்று பெயர் வாங்கி விட்டார். அவரைத் தெரியாதவர் கிடையாது. அரிஸ்டபானிஸ் தமது நாடக பாத்திரங்களில் ஒருவரை அவரைப் போலச் சிருஷ்டித்து விட்டார். ஏதென்ஸ் நகர வைதீக ஜனங்கள் ஸாக்ரடீஸிடமும், ஜனங்களுடைய அபிப்பிராயங்களைப் புரட்டி இளைஞர்களுக்குத் தங்கள் சொந்த மதத்திலேயே சந்தேகம் உண்டாக்க முயன்ற வேறு சிலரிடமும் ஆத்திர மடைந்தார்கள். ஆனால் ஸாக்ரடீஸ் ஓர் நாஸ்திகரன்று. அவர் ஓர் புரட்சியை உண்டாக்கவும் விரும்பவில்லை. ஆனால், புரட்சி உண்டாக்க முயன்ற பிறதத்துவ சாஸ்திரிகள் கோஷ்டியில் ஸாக்ரடீஸையும் ஜனங்கள் சேர்த்து விட்டார்கள். ஆகையால், தம் நாட்டின் மத விரோதியாக, ஸாக்ரடீஸை அவர்கள் கருதி விட்டார்கள். அதனால், மரண தண்டனை விதிக்கக்கூடிய ஒரு குற்றத்தை அவர் செய்துவிட்டதாக, அவர் மீது விசாரணை நடக்கலாயிற்று.

தமது விசாரணையின் பொழுது ஸாக்ரடீஸ் செய்த பிரசங்கமும், தமக்கு மரண மண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் சாவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் தமக்கு மிக நெருங்கிய நண்பர்களுடன் புரிந்த சம்பாஷணையும் இன்று தினம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கிரேக்கத் தெய்வங்களை அவர் பொய்யென்று மறுத்தார் என்பதும் இளைஞரைத் தீய வழியில் செலுத்திக் கொண்டிருந்தார் என்பதும் அவர் மீது சாட்டப்பட்ட குற்றங்கள். அத்தகைய குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்கலாமென்பது கிரேக்க நாட்டின் சட்டமா யிருந்தது. ஆதலால், இக்குற்றத்திற்காக அவர் விசாரிக்கப்பட்டார். அவர் விசாரிக்க உட்கார்ந்திருந்த சபையில் 501 அக்கத்தினர் இருந்தார்கள். இந்த 501 அங்கத்தினரும் ஏதென்ஸ் நகர ஜனங்களிலிருந்து திருவுளச் சீட்டுப் போட்டுப் பொறுக்கப்பட்டவர்கள். அந்தச் சபைக்குத் தலைவரோ நீதிபதியோ கிடையாது. மெலிடஸ் என்ற ஒரு சிறிய புலவர் இருந்தார். அவரும் தோல் வியாபாரியான ஆனிடஸ் என்ற இன்னொருவரும் பிராஸிகியூஷன் தரப்பில் வழக்கை நடத்தினார்கள். அவ்விருவரும் மிகுந்த செல்வாக்கு வாய்ந்தவர்கள். அவர்களுடைய செல்வாக்குக்குப் பலர் ஆட்பட்டுவிட்டார்கள்.

ஸாக்ரடீஸ் தமது பிரசங்கத்தைச் செய்தார். அவரது எதிர்வாதப் பிரசங்கம் முடிந்ததும், அவர் குற்றவாளியா அல்லவா என்பதை முடிவு செய்ய ஓட்டு எடுக்கப்பட்டது. 281 பேர் குற்றவாளி யென்றும் 220 பேர் குற்றவாளியல்ல வென்றும் ஓட்டுக் கொடுத்தார்கள். பெரும்பாலோர் குற்றவாளி யென்று ஓட்டுச் செய்ததால், அவ்வாறே தீர்மானிக்கப்பட்டது. என்ன தண்டனை அவருக்கு விதிக்கவேண்டுமென்பதுபற்றிப் பேசும்படி பிராஸிகியூடருக்குச் சபையோர் கட்டளையிட்டார்கள். இது அங்கு வழக்கமாயிருந்தது. மரண தண்டனையே விதிக்க வேண்டுமென்று பிராசிகியூடர் வாதித்தார். இதை விடக் குறைந்த தண்டனையே விதிக்க வேண்டுமென்று வாதிக்க ஸாக்ரடீஸுக்கு உரிமையுண்டு. எனவே, அவர் தமது இரண்டாவது பிரசங்கத்தைச் செய்தார். ஆதலால், அவருடைய இரண்டு பிரசங்கங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஸாக்ரடீஸின் இரண்டாவது பிரசங்கத்தையும் கேட்டு விட்டு, சபையோர் அவருக்கு மரண தண்டனையையே விதித்து விட்டார்கள். அதன் பிறகு, ஸாக்ரடீஸ் தமது இறுதிப் பிரசங்கத்தைச் செய்தார். பின்னர், அவரைச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள். அவர் பிரசங்கங்கள் நாம் படிக்க வேண்டியவை.

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம்: 41, பிராட்வே.

4-C, சல்லியன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர்.

சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமா? சுத்தமாய் விலை உயர்ந்த உடைகளை ஜலத்தில் இடாமல் பெட்ரோலில் செய்து தரவேண்டுமா? சாயம் அதுகளின் நிலைமை மாறாமலும் சாயம் போட்டுத் தரவேண்டுமானால், ஆங்கிலோ-பர்மா பின்மேன்காரரிடமே உங்கள் துணிகளை அனுப்புங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகள் துணிகளுக்கு இலவசச் சலவை.

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

வாலிபர் மகாநாட்டில்—

சென்ற வாரத்தில் மிக முக்கியமான சம்பவம் சென்னையில் நடந்த 'மாகாண வாலிபர் மகாநாடு.' தேச சேவைக்காகவே தங்கள் ஜன்மங்களை அர்ப்பணித்துள்ள இளைஞர் பலர் மேற்படி மகாநாட்டைக் கூட்டியிருந்தார்கள். காங்கிரஸிலும் சர்க்கா சங்கத்திலும் அரிய ஊழியம் செய்ததோடு கடந்த பதினைந்து வருஷங்களாக மகத்தான தியாகங்களைச் செய்துள்ள ஸ்ரீயுத என். எஸ். வரதாச்சாரியார் மகாநாட்டின் அக்ராஸனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். 'வாலிபர் மகாநாடு' காங்கிரஸ் கட்டிடத்தில் நடந்தது அதற்குத் தனிக் கௌரவத்தையும் தந்தது. மேற்படி மகா நாட்டைத் திறந்து வைத்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியர், திரு. சந்தானம் வாலிபர்கள் ஊக்கமெடுத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தைப்பற்றிய ஆழ்ந்த கருத்துக்களைக் கூறினர்.

ஸ்ரீயுத வரதாச்சாரியாரின் தலைமைப் பேருரை சுருக்கமானதாயிருந்தபோதிலும் உணர்ச்சியும் கருத்தும் செறிந்திருந்தது. "உங்களில் அநேகர் தேசீயப் போரில் ஈடுபட்டு, பரம கஷ்டப்பட்டீர்கள். இப்பேர்ப்பட்ட உங்களிடையே நிற்பதில் எனக்குப் பரமானந்தம்" என்று அவர் பிரசங்கத்தை ஆரம்பித்த சொற்கள் இந்த வாலிபர் மகாநாட்டின் தனிப் பெருமையை அறிவித்தன. அன்றைக்கு தலைமைப் பிரசங்கத்திற்குப் பின் தமிழில் வெகு உணர்ச்சியோடு ஒரு பிரசங்கத்தை வரதாச்சாரியார் செய்தார். எத்தனையோ 'வாலிப' மகாநாடுகளைச் சென்னை பார்த்திருக்கிறது. ஆனால் அன்றைய தினம் காங்கிரஸ் மண்டபத்தில் கூடிய மகாநாடுதான் தேசிய வீரர்களின் மகாநாடு. ஆகவே தனிப்பெருமை கொண்டது. இந்த மகாநாட்டைக் கூட்டுவதற்காக உழைத்த பண்டுருட்டி தேவநாயகையா, சென்னை லட்சுமணசாமி, ஜய சிங் டாட்டியா, S. V. L. நரஸிம்ஹம் முதலியவர்களுக்கு சென்னை மாகாணம் கடமைப்பட்டிருக்கிறது.

கதரை கட்டுங்கள்

"கண்டிஷன் ஆப் இந்தியா"

இது ஒரு ஆங்கிலப் புத்தகம். இந்திய சர்க்கார் இந்நூல் இந்தியாவில் நுழையாதவாறு தடுத்திருக்கின்றனர். சீமையிலுள்ள 'இந்தியா லீக்' சங்கத்தார் இந்தியாவின் நிலையை ஆராய்ச்சி செய்து வெளியிட்ட அந்தப் புத்தகத்தின்மீது இவ்வளவு காரத்தோடு சர்க்கார் ஏன் சீறி விழவேண்டுமோ தெரியவில்லை. தடியடிப் பிரயோகங்கள், சிறையில் தேச பக்தரை இந்திய சர்க்கார் நடத்தும் விதம் இவைகளைப் பற்றி எழுதப்பட்டிருப்பது இந்திய சர்க்காருக்குக் கசப்பாயிருக்கிறது போலும். மேற்படி புத்தகத்தைப் பற்றிய புகழுரைகள் சீமைப் பத்திரிகைகளில் வெளியாயிருக்கின்றன. ஆனால் ஒரு புத்தகத்தை மட்டும் தரிசனம் செய்யக் கூட இந்தியாவில் வழியில்லை. மகா 'பராக்கிரமம்' வாய்ந்ததான ஓர் ஏகாதிபத்தியம் ஒரு சின்னப் புத்தகத்துக்குப் பயப்படும்படியான காலம் வரவேண்டுமோ? இத்தகைய அடக்குமுறை அமுல்கள் எத்தனை நாளைக்குப் பலிக்குமோ பார்ப்போம்.

இந்தியாவில் பிரிட்டிஷ் துரைத்தனத்தின் அடக்குமுறைகளைப் பற்றி பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்ற பேரறிஞர் சமீபத்தில் பிரிட்டிஷாரை நோக்கி எழுதியுள்ள சில வசனங்களை இங்கு எடுத்துக் காட்டுவது உபயோகமாயிருக்கும்.

"இத்தகைய அடக்குமுறைகளால் வரவர வெறுப்பு அதிகப்படத்தான் செய்யும். காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. என்றேனும் ஒருநாள் மீண்டும் கிளர்ச்சி ஏற்பட்டே தீரும். 'பலாத்காரம்' என்றால் என்னவென்பதை அழுத்தமாகச் சொல்லிக் கொடுத்தவர்கள் ஆளுபவர்களே யாவர். காங்கிரஸின் புனிதமான தத்துவம் எங்கே, மிருக பல நம்பிக்கை எங்கே? இத்தகைய அடக்கு முறைகளின் பயனாக வேறோர் கிளர்ச்சி முழு வேகத்தோடு இந்தியாவில் தோன்றி நம்மை எதிர்க்கப் போகிறது. அவ்வளவுதான். அதன் பயனாக நாம் இந்தியாவையே இழந்தாலும் இழந்து விடுவோமோ என்னவோ?"

ஷவுகத் அண்ணா!

ஷவுகத் அலி அண்ணா தெற்கே மாப்பிள்ளைமார் மகாநாட்டில் வந்து பேசிக் கொண்டிருக்கிறார். அந்த மகாநாட்டில் அவர் தெரிவித்த சில அபிப்பிராயங்களை எதிர்த்து 'அல்அமீன்' ஆசிரியருள்பட சில தேசிய முஸல்மான்கள் மகா நாட்டினின்று வெளியே நடந்து காட்டுகின்றார்கள். ஆனால் இதே சமயத்தில் பம்பாயில் இன்னொரு காட்சி நடைபெறுகிறது. ஒரு காலத்தில் ஷவுகத் அண்ணா, "கிலாபத்" என்று ஒரு பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தாரென்பது சிலருக்குத் தெரிந்திருக்கலாம். அப்போது 'கிலாபத்' ஆபீஸில் வேலை செய்த ஊழியர்களுக்கு 1450 ரூபா பாக்கி தரவில்லையாம். அந்த ஊழியர்கள் வழக்குப் போட்டு ஜெயித்து விட்டார்களாம். ஷவுகத் அண்ணாவுக்கு இப்போது பணம் சம்பந்தப்பட்ட வரையில் குறைவு ஏதும் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஆனால் மன அமைதி, தேச சேவை முதலிய கலம்கள் பூஜ்யமாயிருக்கின்றனவே. என்ன செய்வார் பாவம்!

தலைக்கு நேரே துப்பாக்கி!

"காங்கிரஸ் கமிட்டியார் கூடுவதற்கு சர்க்கார் இடைஞ்சல் ஏதும் செய்யப்போவதில்லையென்று சொல்லப்படுகிறது. ஆனால் சட்டத் தடைகளை சர்க்கார் வாபீஸ் வாங்கிக் கொள்ளவில்லை. ஆகவே நம் தலைக்கு நேரே துப்பாக்கியை சர்க்கார் நீட்டிக் கொண்டிருப்பது போன்ற ஓர் நிலையில் நாம் கூட்டம் போடுகிறோம். கோடிக் கணக்கான மக்கள் வேத வாக்காக மகாத்மாவின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்கின்றோம். அப்பேர்ப்பட்ட மகாத்மாவின் அறிக்கை வந்த பின்பும் துரைத்தனம் இந்தக் கொள்கையோடு இருக்கிறதே! இந்த நிலையில் சுயமரியாதையுடைய எந்தத் தேசத்தாரும் கூட்டம் போட ஒப்பார். ஆனால் இந்தியர்களாகிய நம் பாடோ கூட்டம் போட்டுத் தீரவேண்டியிருக்கிறது."

—டாக்டர் ஸையத் மகமத்.

காந்திஜியோடு

[காந்தியடிகளோடு பிரயாணம் செய்து கொண்டிருக்கும் ஒரு அன்பர் எழுதிவரும் கடிதங்களுள் 22வது கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு.]

அகக்கண் ; புறக்கண்

ஒரு அமெரிக்கப் பாதிரியாரை மகாத்மா சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார். மனிதப் பிரயத்தனத்தினால் மதத்தைவிட்டு மதம் மாறுவதைத் தாம் நம்புவதில்லையென மகாத்மாஜி கூறினார். யானை பார்க்கச் சென்ற குருடர்களைவிடக் கேவலமாகச் சத்தியத்தை நாடி அலையும் ஜீவான்மாக்கள் இருக்கின்றனர் என மகாத்மா கூறினார். 'கண் என்ற ஒரு அங்கம் குறைவு பட்டுப் போனவர்கள் இதர அங்கங்களில் சக்திவான்களாக இருப்பதைக் காண்கின்றோம். ஆனால் சத்தியத்தை நாடி அலைபவர்கள் ஆத்ம சோதனை செய்யுங் காலத்தில் மாசுடைய கண்ணாடி மூலமாகவே பார்க்க வேண்டி யிருக்கிறது. ஆகவே தங்கள் மதத்துக்குப் பிறரை மாற்றிக் கொள்வதாகச் சொல்வதெல்லாம் வெறும் வாய்ப் பந்தல்தான். மனிதர்கள் எத்தனை பேர்கள் உலகில் இருக்கின்றனரோ அத்தனை வழிகளிருக்கின்றன கடவுளை யடைவதற்கும்' என்று மகாத்மா கூறினார்.

சரித்திர புருஷர்களா ?

மனித ஜாதியில் பிறந்த சில உத்தம புருஷர்களை ஏசுபகவானுக்கு ஒப்பிட்டு அந்தப் பாதிரி நண்பர் பேசினார். அப்போது காந்திஜி அவ்வாறு ஏசுபகவானை யாரோடும் ஒப்பிட்டுப் பேசுவதற்கில்லையென எடுத்துக் கூறினார். 'கிறிஸ்துவர்களால் பூஜிக்கப்படும் அந்த ஏசுநாதர் சரித்திரத்தில் சொல்லப்படும் சாதாரண ஏசுநாதரன்று. பகவானின் உலக உருவமென பக்தர்தள் ஏசுநாதரைக் கருதுகின்றனர். அதே மாதிரி நானும் எனது கற்பனையில் தோன்றும் கண்ணனைக் கடவுளாக மதிக்கின்றேன். என்னுடைய கருத்திலுள்ள கண்ணபிரானுக்கும் சரித்திரத்தில் வர்ணிக்கப் பட்டுள்ள கண்ணபிரானுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. சரித்திரங்களில் வர்ணிககப்படும் ஸ்வரூபங்களெல்லாம் செத்துப் போய்விட்டன. ஆனால் உலக வஸ்துக்களைப் போல கருத்துக்கள் அழியவே அழியா.

மனோலயத்தில் உதிக்கும் அவதாரங்கள் சத்தியமானவை; என்றென்றும் வாழ்பவை. சரித்திர பூர்வமான ஆதாரங்களைக் காட்டி ஓர் மதத்தைத் கட்டுவதென்பது இயலாத காரியம். அப்படிச் செய்தால் அந்த மதத்தில் நம்பிக்கை வரவரக் குறைந்துகொண்டே போகும். ஆகவே துளஸிதாஸரும் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? ராமனைவிட அவனது நாமம் சக்தி வாய்ந்தது என்பது துளஸிதாஸர் வாக்கு.'

வேண்டுவது பணமா ? மனதா ?

அஸ்ஸாம் மாகாணத்திலின்று விடை பெற்றுக் கொள்ளும்போது மகாத்மா ஒரு கூட்டத்தில் உருக்கத்தோடு பேசினார்.

"இந்த மாகாணத்தில் பணம் அதிகம் கிட்டவில்லை. நான் தேர்ச்சியடைந்த பிச்சைக்காரன் என்பது உலகறிந்த விஷயம். எதற்காக இந்தப் பணம் வசூலிக்கப்படுகிறதெனின் இந்தப் பணத்தோடு மனித இருதயங்களையும் வசூல் செய்வதற்காகத் தான். யாரோ ஒரு பணக்காரன் ஒரு கோடி ரூபாயை அள்ளி என்னிடம் கொடுத்துவிடுவதால் தீண்டாமை இந்த நாட்டிலிருந்து ஒழிந்து போகாது. ஆனால் மேல் ஜாதியாரின் ஒருகோடி மக்களின் ஹிருதய ஆதரவு மட்டும் எனக்கிருந்தால் அதுவே பலமான உதவியாகும். வேலை செய்வதற்கு ஆனந்தமுண்டு. 'தீண்டாமை' யொழித்தல் என்றால் என்ன என்பதை முதலில் விளக்க வேண்டும். ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் உள்ள உயர்வு தாழ்வு என்ற வித்தியாசத்தைப் போக்குவது மட்டுமல்ல—மேல் ஜாதியார் என்பவரிடையே யுள்ள வித்தியாச உணர்ச்சிகளைப் போக்குவதும் அதில் அடங்கியே யிருக்கின்றது. ஹிந்துக்கள், முஸல்மான்கள், கிறிஸ்துவர் முதலிய பிரிவுகளுக்குள்ளும் ஒற்றுமை யேற்படுத்த வேண்டுமென்பது இந்த இயக்கத்தின் கருத்து. ராஜீய காரணங்களுக்கான ஒற்றுமை என்பது மிகமிகச் சாதாரண விஷயம்."

யார் சுத்தமுடையவர் ?

"ஆனால் மிகமிக ஆழமாக இந்தத் தீண்டாமை என்ற கொடிய வேர் ஓடியிருக்கிறது. கீதையில் சொல்லி யிருப்பது போல பிராமணன்—பறையன் இருவரும் சமமே என்ற உணர்ச்சியும், பிறவியினால் எவரும் தாழ்ந்தவரில்லை என்ற எண்ணமும் இந்த தேசத்தில் ஏற்பட வேண்டும். தீண்டத்தகாத வஸ்துவென்று ஏதாவது இருக்குமானால் அதை அவரவர்கள் தங்கள் தங்கள் நெஞ்சுகளில் தேடவேண்டும். கெட்ட எண்ணங்களெல்லாம்தான் தீண்டத் தகாதவைகள். அவைகளைத் தான் ஒதுக்கி வைத்து வாழவேண்டும். மனித வர்க்கத்தையா ஒதுக்கி வைப்பது? எல்லாரும் ஸ்னானம் செய்துவிட்டால் சுத்தமடைந்து விடுவதாகச் சொல்கிறார்கள். அது போதாது. எருமைமாடு கூடத்தான் தினம் குளிக்கிறது. யாரொருவன் கடவுளுக்குப் பயந்து வாழ்ந்து கொண்டும், சகோதர வர்க்கத்துக்குச் சேவைசெய்து கொண்டும் வாழ்கின்றானோ அவனே சுத்தன்!"

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய
மங்கையர்க்கரசியின்
காதல் முதலிய கதைகள்
(தபாற்கூலி யுள்பட 10 அணா ஸ்டாம்பு)
சுதந்திரச் சங்கு காரியாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

கதரை அணியுங்கள்

மூன்று துன்பமான சம்பவங்கள்

எப்ரல் 25-ம்தேதி காந்தியடிகள் தென்பீகாரத்திலுள்ள அர்ரா என்னுமிடத்திற்குச் சென்றார். அங்கு சனாதனிகள் தகராறு செய்வார்கள் என்றே அவரை ஒரு மோட்டார் லாரியில் கொண்டு சென்றனர். அப்போதும் சனாதனிகள் விடவில்லை. அவர்கள் லாரியை நோக்கி ஓடிவந்தனர். ஜனங்கள் 'பிடி பிடி' என்று கூச்சலிட்டனர். ஒரு பெரும் சமுத்திரத்தின்மேல் ஒரு சிறு துளிபோல் அவர்கள் பின்னால் தள்ளப்பட்டனர். நல்ல வேளையாக ஒருவருக்கும் சாயமில்லை. போலீசாரும் ஜனங்களும் அவர்களைச் செந்தூக்காய்த் தூக்கி அப்புறப்படுத்தினர். இந்தக் கண்ணாருவியைப் பார்க்க முடியாமல் காந்தியடிகளுக்கு மயக்கம் தட்டியதாம். தமக்குள்ளே, தம்மை யறியாமலேயே ஜபிக்கப்பட்டுவரும் ராம நாமத்தை வெளிப்படையாகக் கூறியபோதுதான் அவருக்குத் தெளிவு ஏற்பட்டதாம்.

இரண்டாவது சம்பவம்

அர்ராவிலிருந்து காந்தியடிகள் பக்ஸாருக்கு ரயில்மூலம் பிரயாணம் செய்தார். பக்ஸாரை அடையும்போது நல்ல நடுப்பகல். அடைந்த 15 நிமிஷத்திற்குள் சநாதனிகளுக்கும் தொண்டர்களுக்கும் சச்சரவு நடப்பதாகத் தெரிந்தது. காந்தியடிகள் காரை விட்டு இறங்கிக் கால்நடையாகவே பிரசங்க மேடைக்கு நடந்து சென்றார். ஹரிஜனத் தொண்டர்கள் மூவருக்கு நல்ல அடி, இருவருக்குத் தலையில் காயம், ஒருவருக்குக் கையில் வீக்கம். சனாதனிகள் நால்வருக்குச் சொற்ப காயங்கள். அவர்களைக் காந்தியடிகள் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்து சமாதானம் கூறினார். அவர்களை அடித்தது தொண்டர்களாயிருப்பின், அத்தொண்டர்கள் சார்பில் தம்மாலான தவத்தைத் தாம் செய்யத் தயாராயிருப்பதாய்க் கூறினார்.

மூன்றும் சம்பவம்

பின்னர் மகாத்மா த்யோகார் செல்வதற்காக ஜாஸதி ஸ்டேஷனில் இறங்கினார். வழி நெடுகக் கூட்டம் ஆங்காங்கு கருப்புக் கொடிகள். மோட்டார் மெல்லக் கூட்டத்தின் நடுவே ஊர்ந்து சென்றது. அப்போது மோட்டார் முகட்டில் பல அடிகள் விழுந்தன. முகட்டின் பின்புறமுள்ள கண்ணாடி உடைந்துவிட்டது. அது கல்லடியாலோ தடியடியாலோ நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. எப்படியிருப்பினும் காந்தியடிகள் ஒரு அபாயத்தினின்றும் தப்பித்தார் என்பது மட்டும் நிச்சயம்.

இம்மூன்று சம்பவங்களையும் பற்றிக் காந்தியடிகள் த்யோகரில் செய்த பிரசங்கத்தின் சாரத்தை அடியிலே தருகிறோம்.

அரைப் பொய், முழுப் பொய்கள்

'இப்புண்ய ஸ்தலத்தை மறுபடியும் தரிசிப்பது எனக்கு ஆனந்தமளிக்கிறது. இது எனது மூதாதையர்களும் தரிசித்த க்ஷேத்ரம். ஆனால் அவர்களது ஆதர்ஸங்கள் வேறு; என்னுடையவை வேறு என்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். 1915ம் வருஷம் நான் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்தபோது முதல்முதலாக இங்கிருக்கும் ஆசிரமத்தைத் திறந்து வைக்க அழைக்கப்பட்டேன். அப்போது பண்டாக்கள் (சநாதனிகள்) யாவரும் எனக்கும், என்னுடைய கோஷ்டியாருக்கும் அன்போடு சேவை செய்தனர். அப்போதும் தீண்டாமையைப் பற்றி எனக்கு இதே எண்ணங்கள்தாம். இருந்தன வென்றும், ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் இதே கொள்கைகளைத்தான் பேசி வந்தேன் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் இப்போதோ, அந்தோ! அவர்களுக்குள்ளேயே இரண்டு பிளவுகள் உண்டாகி விட்டன. ஒரு பகுதியார் என்னை ஆதரிக்கின்றனர், ஒரு பகுதியார் எதிர்க்கின்றனர். எல்லாக் காலத்தும் எல்லா மக்களுடைய அன்பையும் நிரந்தாமாகப் பெறுவதென்பது மனிதனால் சாத்யபடாது என்பது எனக்குத் தெரியும். ஆகவே என்னுடைய பழைய நண்பர்களிலேயே சிலர் எனக்கு விரோதமாயிருப்பதில் துக்கமோ, ஆச்சரியமோ உண்டாகக் காரணமில்லை. ஆனால் என்னைத் தாக்க அவர்கள் கையாளும் முறைகள் மட்டுமே என் மனத்தை வருத்துகின்றது. எனக்குப் பொது ஜனங்களிடையே உள்ள செல்வாக்கைக் குறைப்பதற்காக அரைப் பொய்யும், முழுப்பொய்யுமாய் விளம்பரங்கள் வெளியிட்டவர்கள் இவர்களே என்று நினைக்கிறேன். மட்டுமரியாதை இவைகளெல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில்

தென்னிந்தியாவிலும் கூடச் சில இடங்களில் கருப்புக்கொடி ஊர்வலங்கள் நடந்தன. ஆனால் அவைகள் அமைதியாய் யிருந்தன. தங்களது கருப்புக் கொடிகளால் என் இயக்கத்திற்குத் தாங்கள் விரோதிகள் என்பதைக் காட்டிக் கொண்டனர். அவ்வளவுதான். சில கருப்புக்கொடிச் சிறுவர்கள் எனது வந்தனத்துக்கு பதில் வந்தனங்கூடச் செய்தனர். இவ்விடத்திலோ மரியாதையில்லை என்பது மட்டுமல்லாமல் பலாத்காரத்திலும் இறங்கி விட்டனர். ஜாஸதியில், இன்று காலை, அவர்கள் வெறுப்பான வெறுங்கூச்சல் போட்டனர். மோட்டார்க் கூட்டின் மேல் வன்மையான தடியடிகள் விழுந்தன. பின்புறமுள்ள கண்ணாடி சுக்கு நூறாய் உடைந்து போனது. தெய்வச் செயலாக நான் அடிபடவில்லை. எனது உடலை அடித்துத் துன்புறுத்த அவர்கள் எண்ணாதிருக்கலாம். என் மேலுள்ள கோப வேகத்தால் மட்டும் இவ்வாறு நடந்திருக்கலாம். அவர்களது எண்ணம் யாதாயினும் நடத்தை சந்தேகமில்லாமல் பலாத்காரமானதாயிருந்தது.

சாமூரினின் நேர்மை

இவர்களுடைய இந்த நாட்கால நடத்தையைக் கள்ளிக்கோட்டை சாமூரினின் நேர்மையான நடத்தையோடு ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். நான் குருவாயூர் சென்றபோது திரு சாமூரின் என்னை மரியாதையோடு தனது அரண்மனைக்குள் வரவேற்றார். அவருக்காவது என்மேல் கோபம் வரக் காரணமுண்டு. ஏனெனில் குருவாயூர்க் கோயிலைச் சுற்றி. சத்தியாக்ரகப் போர் மாதக் கணக்கில் நடந்து கொண்டிருந்தது. அவர் எனக்கு விரோதமான ஆர்ப்பாட்டங்கள் யாவற்றையும் தடுத்து விட்டார். கருப்புக் கொடி கூடக் கிடையாது. அவர் இரண்டு கட்சிக்காரர்களும் இரண்டு கொள்கைக்காகப் போராடுகிறோம் என்று வெளிப் படையாய்ச் சொல்லி விட்டுவிட்டார். ஆனால் இங்கே தங்களைத் தாங்களே சனாதனிகள் என்று கூறிக் கொண்டு சனாதன தர்மத்தைத் தங்கள் சொந்த சொத்தாக எண்ணுமிவர்கள் என்னை எதிர்ப்பதன் காரணமென்ன? அவர்களைப் போலவே நானும் சனாதன தர்மத்தைப் பின்பற்

றத்தான் முயன்று வருகிறேன். சனாதன தர்மம் இதுதான் என்று நிச்சயம் புரிய அவர்களுக்கு எவ்வளவு அதிகார முண்டோ அவ்வளவு அதிகாரம் எனக்கும் உண்டு. அவர்கள் எந்த சாஸ்திரங்களை ஆதாரம் காட்டுகின்றார்களோ, அதே சாஸ்திரங்களைத் தான் நானும் ஆதாரங் காட்டுகிறேன். ஆனால் அவர்களுக்கும் எனக்கும் வித்தியாசம் இருக்கிறதென்பதும் வாஸ்தவம்தான். அவ்வித்தியாசம் சாஸ்திரங்களை அர்த்தம் செய்வதில் தவிர வேறொன்றிலு மில்லை. அத்தகைய வித்தியாசங்கள் எப்போதும் தான் இருக்கும். நான் என்னுடைய கொள்கைகளை ஒப்புக்கொள்ளும்படி ஒருவரையும் கட்டாயப் படுத்துவதில்லை என்பதோடு அவர்கள் திருப்தி அடைய வேண்டும். கட்டாயப் படுத்துவதில் எனக்கு நம்பிக்கையே கிடையாது. மக்களுடைய பகுத்தறிவுக்கும், இருதயத்துக்கும் விண்ணப்பித்துக் கொள்வதால் மாத்திரமே அவர்களை என் வழிக்குத் திருப்ப நினைக்கிறேன்.

கட்டாயப்படுத்தல் கூடாது

ஆயிரக் கணக்கான ஜனக்கூட்டங்களிடையே பல கோயில்களை ஹரி ஜனங்களுக்குத் திறந்து விட்டிருக்கிறேன். ஆனால் சிறு பான்மைக் கட்சியினர் மிகுதியாயிருந்த ஒரு இடத்தில் அவர்களும் ஒப்புக்கொண்டா லொழிய கோயிலைத் திறக்க முடியாதென்று கூறிவிட்டேன். கட்டாயத்தினால் ஏதாவது கோயில் திறக்கப்பட்டிருக்குமானால் அதை ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில் திரும்பவும் மூடுவதற்கு என்னாலான முயற்சி செய்வேன்.

சனாதனிகளுக்கு

கட்டாயத்தால் பரிசுத்தப் படுத்துவதென்பது முடியாத காரியம். ஆகவே இவர்களது தாக்குதல்களுக்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க என்னாலான வரை முயன்றேன். யாதொரு காரணமும் காணேம். ஒரு வேளை பொது ஜன அபிப்பிராயம் தீண்டாமை நீங்க வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாய் இருப்பதால் கெட்ட முறையோ, நல்ல முறையோ என்னுடைய பிரயாணத்தை எப்படியாவது தடுத்து விடவேண்டு மென்று அவர்கள் நினைக்கலாம். இன்று காலை சனாதனிகள் தங்கள் நடத்தையால் சனாதனக் கொடியை யுதிர்ஷ்டிரர் ஓர் அரைப் பொய் கூறித் தாழ்த்தியது போல் தாழ்த்தி விட்டனர். யுதிர்ஷ்டிரர் பொய்க் கூறியவுடன் அவரது தேர்ச் சக்கரங்கள் சில அடிகள் பூமியில் புதைந்துவிட்டன என்றும், இறந்த பிறகும்கூட அப்பாபத்திற்காக அவர் பிராயச்சித்தம் செய்ய வேண்டி நேர்ந்ததென்றும் மஹாபாரதமே கூறுகின்றது. ஆகவே நான் எனது சனாதன நண்பர்களுக்குச் சொல்லுகின்றேன். அவர்கள் தங்கள் ஹிருதய பூர்வமாக இப்பாபத்திற்காக வருந்தி, இனிமேல் இத்தகைய காரியங்களில் இறங்காதிருக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சீர்திருத்தக்காரர்களுக்கு

சீர்திருத்தக்காரர்களுக்குச் சொல்லுகின்றேன். நீங்கள் பெரும்பான்மைக் கட்சியிலுள்ளவர்கள். உங்களை எதிர்ப்பவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். உங்களுடைய பொறுமை, கருணை, தூய்மை முதலிய குணங்களால் அவர்களை உங்கள் வழிக்குத் திருப்ப வேண்டும். இந்த இயக்கம் நம்மை நாமே பரிசுத்தம் செய்து கொள்வதற்காக ஏற்பட்டது. பரிசுத்த மானவர்களுக்குத்தான் இதில் இடமுண்டு. எதிர்ப்பாளர்களைத் தடுக்கக்கூடாது. கருப்புக் கொடி பிடிக்க அவர்களுக்கும் உரிமையுண்டு. அப்போதுதான் நானும் இவ்வியக்கத்திற்கு எவ்வளவு பேர்கள் எதிரிடையாய் இருக்கிறார்கள் என்பதை அறிய முடியும். அவர்கள் என்னை வழி மறித்து பலாத்காரம் செய்ய ஆரம்பித்தால்தான் சங்கடம் உண்டாகிறது. எப்படி யிருப்பினும், நீங்கள் பெரும் பான்மைக் கட்சியிலிருப்பதால் மிகவும் பொறுமையாக, உண்மையை எடுத்துக் கூறி அவர்களை வசப்படுத்த வேண்டும். அதுவும் முடியவில்லை என்றால் நம்மிடம் உண்மையுள்ள வரை காலம் அவர்களை வழிக்குக் கொணர்ந்துவிடும். சீர்திருத்தக்காரர்கள் சனாதனிகளின் செயல்களைத் தாமும் திருப்பிச் செய்தல் என்பது கூடவே கூடாது. இப் பரிசுத்தம் செய்துகொள்ளும் இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் பலாத்காரம் செய்வரேல் நான் அதற்காகக் கடுமையான தவம் செய்யவேண்டி நேரிடும்.

சீனாவின் கதையைக் கேட்ட நமது நாட்டுப் பெண்கள் என்ன செய்யப் போகிறார்கள்.

—ஒரு வாரச் செய்தி.

நமது நாட்டுப் பெண்கள் நமது புத்திரர்களைக் கட்டிக் கொள்ளப் போகிறார்கள்.

* * *

அதனால் என்ன?

—ஒரு கட்டுரைத் தலைப்பு.

எதனால்தான் என்ன?

* * *

சதிருக்கு வந்திருக்கும் எழுத்தாளர்களில்,

—ஒரு வாரப் பத்திரிகை.

கட்டுரை எழுதும் நடிகைகள் எங்கு போவது?

* * *

காலை 10 மணிக்கு முகூர்த்தம்; நீங்கள் போகவேண்டும்.

"வண்ணான் ராமன் வராவிட்டாலோ—"

—ஒரு விளம்பரம்.

அழுக்கு வேஷ்டியோடேயே போவது.

* * *

சிரித்துச் சிரித்து வயிறு புடைக்குதே.

—ஓர் விளம்பரம்.

பசியால் வயிரொட்டிப் போனவர்களுக்கு நல்ல மருந்து.

* * *

"நானும் என் பெண்டாட்டியும்".

—ஓர் ஆங்கில தினசரியில்
தொடர்ச்சிக் கட்டுரை.

இந்தப் பெண்டாட்டி புராணம் ஓயாது போலிருக்கிறதே! இந்த மாதிரி ஒவ்வொரு புருஷனும் அவனவன் இல்லற சுகத்தைப் பற்றி எழுதத் தொடங்கினால் உலகிலுள்ள அத்தனை பத்திரிகைகளும் போதாவென்று சத்தியமாய்ச் சொல்வோம்.

சத்திய சோதனை

முதல் பாகம் ரு. 1-8.
இரண்டாம் பாகம் ரு. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-C, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரு. 4. வெளிநாடு ரு. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-C, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

இந்த கேட்லாகில் ஏப்ரில் மாதம் வெளியிடும் புதிய தென்னிந்திய ரிகார்டுகளின் விவரங்களும், பாட்டுகளும் தமிழில் அமைத்திருக்கிறோம். இதை "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" அவர்களின் அதிகாரம் பெற்றுள்ள வியாபாரிகளனைவரிடத்திலும் இலவசமாகக் கிடைக்கும். அப்படி கிடைக்காவிடில், எங்களுக்கு எழுதினால், உங்களுக்கு தபால் செலவின்றி, நாங்கள் அனுப்பித் தருகிறோம்.

தி கிராமபோன் கம்பனி லிமிடெட்.

45, ஸௌத் பெரேட், பெங்களூர்.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.